ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2508 - 2026 සැප්තැම්බර් මස 25 වැනි සිකුරාදා - 2026.09.25

2508 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)

| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 3298 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 3337 |

**கவனிக்க.-** (i) ஒதுக்கீடு சட்டமூலம் 2026.09.18 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்பதற்கான சட்டமூலம் 2026.09.18 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3295 - B 82833 (2026/09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சை களுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான ஆனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**

**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்

## அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்பநிலை திறன்சார் சேவை வகையில் (PL 3) திறந்த ஆட்சேர்ப்பிற்கான விண்ணப்பங்கள் கோரல் 2026

1.0 அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஆரம்பநிலை திறன்சார் சேவை வகைப் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்காகத் தகைமையுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2.0 அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்பநிலை திறன்சார் சேவை வகைக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படவுள்ள பதவிகளின் வெற்றிடங்கள் கீழுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| *தொடர் இலக்கம்* | *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|---|
| 1. | உட்கரு தயாரிப்பாளர் (Core Maker) | 01 |
| 2. | உலோக புனைவாளர் (Fabricator - Metal) | 02 |
| 3. | உலை இயக்குநர் (Furnaceman) | 01 |
| 4. | பொதுப் பொருத்துநர் (Fitter - General) | 08 |
| 5. | கனரக வாகன இயக்குநர் (Heavy Vehicle Operator) | 04 |
| 6. | குழாய் பொருத்துநர் (Pipe Fitter) | 01 |
| 7. | இயந்திர இயக்குநர்- உற்பத்தி (Machine Operator - Production) | 01 |
| 8. | இயந்திர வல்லுநர் (Machinist) | 08 |
| 9. | மரவேலை இயந்திர வல்லுநர் (Machinist-Wood) | 01 |
| 10. | வார்ப்புத் தொழிலாளர் (Foundry Man) | 04 |
| 11. | வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் (Pattern Maker) | 01 |
| 12. | நீர்க்குழாய் தொழிலாளர் (Plumber) | 01 |
| 13. | பற்றவைப்பாளர் (Welder) | 05 |
| 14. | தச்சர் - தளபாடங்கள் (Carpenter - Furniture) | 01 |
| | மொத்தம் | 39 |

3,0 **சம்பள அளவுத்திட்டம்:**

3.1 **சம்பளக் குறியீடு** :PL3-2025

3.2 **சம்பள அளவுத்திட்டம்** : ரூபா 42,780.00 - 10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - ரூ. 66.540.00

குறிப்பு : (i) பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் அட்டவணை III இன்படி 2027.01.01 வரை சம்பளம் செலுத்தப்படும். 2027.01.01 முதல் அட்டவணை || இன்படி சம்பளம் செலுத்தப்படும்.

(ii) இச்சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசினால் அவ்வப்போது வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகளும் உங்களுக்கு உரித்தாகும்.

3.3 **சம்பள முறை** :

| *தரம்* | *ஆரம்பச் சம்பளப் படிநிலை* | *ஆரம்பச் சம்பளம் (ரூ.)* |
|---|---|---|
| III | படிநிலை 01 | ரூ. 42,780.00 |
| II | படிநிலை 12 | ரூ. 48,220.00 |
| I | படிநிலை 22 | ரூ. 53,670.00 |
| விசேட | படிநிலை 32 | ரூ. 59,610.00 |

4.0 பதவியின் / பதவிகளின் தன்மை : நிரந்தரமானதும் ஓய்வூதிய உரிமையுடையதும்

5.0 ஆட்சேர்ப்புத் தரம் : தரம் III

6.0 மொழி மூலம் : சிங்களம் / தமிழ் மற்றும் ஆங்கிலம்

7.0 ஒப்படைக்கப்படும் கடமைகள் :

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *கடமைகள்* |
|---|---|
| உட்கரு தயாரிப்பாளர் (Core Maker) | வார்ப்புகளுக்குத் தேவையான அனைத்து வகையான உட்கருக்களையும் தயாரித்தல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| உலோகப் புனைவாளர் (Fabricator - Metal) | மருத்துவமனைகளுக்கான உபகரணங்களைத் தயாரித்தல், உலோகத் தகடுகளைப் பயன்படுத்தி வடிவங்களை உருவாக்குதல், தகடுகளில் எழுத்துகளை வெட்டுதல், வர்ணம் பூசுதல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| உலை இயக்குநர் (Furnaceman) | அனைத்து வார்ப்புப் பணிகளுக்கும் தேவையான உலைகளை இயக்குதல், உலைகளைப் பழுதுபார்த்தல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| பொதுப் பொருத்துநர் (Fitter - General) | அனைத்து கனரக/இலகுரக பொருத்துப் பணிகளையும் (பெரிய அளவிலான கதவுகள் தயாரித்தல் உட்பட) இயந்திரப் பழுதுபார்ப்புப் பணிகளையும் மேற்கொண்டு மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| கனரக வாகன இயக்குநர் (Heavy Vehicle Operator) | கனரக வாகனங்களை இயக்குதல் மற்றும் அவற்றின் சிறிய பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளுதல். |
| குழாய் பொருத்துநர் (Pipe Fitter) | காற்றழுத்த இயந்திரங்கள் மற்றும் கொதிகலன்களை இயக்குதல், சிறிய பராமரிப்புப் பணிகளை செய்தல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல் |
| இயந்திர இயக்குநர்- உற்பத்தி (Machine Operator - Production) | ஆணி தயாரிக்கும் இயந்திரங்களையும் ஏனைய உற்பத்தி இயந்திரங்களையும் இயக்குதல், அவற்றின் சிறிய பராமரிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் பணிகளுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| இயந்திர வல்லுநர் (Machinist) | போரிங், மில்லிங் லேத் மற்றும் டிரில்லிங் இயந்திரங்களை இயக்கி உலோகப் பாகங்களைத் தேவைக்கேற்ப இயந்திரப்படுத்துதல், சிறிய பராமரிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல் |
| மரவேலை இயந்திர வல்லுநர் (Machinist-Wood) | தச்சுப் பிரிவிலுள்ள அனைத்து இயந்திரங்களையும் இயக்குதல், அவற்றின் சிறிய பராமரிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| வார்ப்புத் தொழிலாளர் (Foundry Man) | வார்ப்புகளுக்கான வார்ப்பு அச்சுகளைத் தயாரித்தல், வார்ப்புப் பணிகளை மேற்கொள்ளுதல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் (Pattern Maker) | வார்ப்பு அச்சுகளுக்குத் தேவையான மர மாதிரிகளைத் தயாரித்தல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| நீர்க்குழாய் தொழிலாளர் (Plumber) | PVC மற்றும் GI நீர்க்குழாய் அமைப்புகளை நிறுவுதல், குளியலறை சுகாதார உபகரணங்கள் மற்றும் ஏனைய பொருத்திகளை நிறுவுதல்; நீர் வழங்கல் அமைப்புகளை இயக்குதல், சிறிய பராமரிப்பை மேற்கொள்ளுதல் மற்றும் மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| பற்றவைப்பாளர் (Welder) | எரிவாயு, மின்சார, TIG மற்றும் MIG உபகரணங்களால் பித்தளை, அலுமினியம், இரும்பு, வார்ப்பிரும்பு மற்றும் துருப்பிடிக்காத எஃகு உட்பட அனைத்து பற்றவைப்புப் பணிகளையும் மேற்கொண்டு மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |
| தச்சர் - தளபாடங்கள் (Carpenter - Furniture) | மரத்தால் அனைத்து வகையான தளபாடங்களையும் தயாரித்தல், மெருகூட்டுதல், பழுதுபார்த்தல் மற்றும் அவற்றுக்கான மதிப்பீட்டு விபரங்களை வழங்குதல். |

8.0 **ஆட்சேர்ப்புத் தகைமைகள்:**

(I) **கல்வித் தகைமைகள்:**

i. கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் குறைந்தது இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

ii. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 28/2016 இன்படி உரிய துறையில் NVQ மட்டம் 03 அல்லது 04 திறனைப் பெற்றிருந்தால் I ஆம் இலக்கத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட கல்வித் தகைமைகள் பொருந்தாது.

(II) **தொழிற்தகைமைகள்:**

ஒவ்வொரு பதவிக்குமான கடமைகளுக்கேற்ப மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு தேசிய தொழில் தகைமையில் (NVQ) நான்காம் (04) மட்டத்திற்குக் குறையாத திறனைப் பெற்றிருக்க வேண்டும்.

ஒவ்வொரு பதவிக்கும் உரிய தொழிற்தகைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | | *தொழிற்தகைமைகள்* |
|---|---|---|
| உட்கரு தயாரிப்பாளர் (Core Maker) | I. | அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது ஒரு வருடப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்த சான்றிதழையும் பின்வரும் தொழிற்திறன் மற்றும் அனுபவச் சான்றுகளையும் சமர்ப்பிக்க வேண்டும் |
| | II. | விசேடப் பணிகளுக்கான உட்கரு வடிவங்களைப் பற்றவைத்தல் அல்லது வார்ப்பதற்குத் திட்டமிடத் திறன். |
| | III. | பல அளவிலான மணல் உட்கருக்கள் மற்றும் வடிவங்களுக்கான வெல்டிங் மற்றும் பேகிங் முறைகளில் அறிவு |
| | IV. | உட்கரு மணல் கலவையைத் தயாரித்து, அடைத்து, வலுவூட்டி காற்றோட்டம் அமைத்து, செம்மைப்படுத்தி உட்கருப் பெட்டியைத் தயாரிக்கும் திறன். |
| | V. | ஒயில் சேண்ட் கலவையைத் தயாரித்து உட்கருக்கள் செய்யும் திறன். |
| | VI. | இரும்பு மற்றும் இரும்பு அல்லாத உலோகப் பணிகளுக்கான உலர் மணல், பசுமை மணல் மற்றும் சிறப்பு களிமண் உட்கருக் கலவைகளை உரிய விகிதத்தில் தயாரிக்கும் திறன். |
| | VII. | லோம் மணலைப் பயன்படுத்தி குழாய் உட்கருக்கள் மற்றும் வார்ப்புரு ஆதரவுடன் உட்கரு வடிவங்களைத் தயாரிக்கும் திறன். |
| | VIII. | அச்சு தயாரிப்பில் உயர்ந்த அறிவும் திறனும். |
| உலோக புனைவாளர் (Fabricator - Metal) | | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| உலை இயக்குநர் (Furnaceman) | I. | அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது ஒரு வருடப் பாடநெறியை வெற்றிகரமாக முடித்த சான்றிதழையும் பின்வரும் திறன் மற்றும் அனுபவச் சான்றுகளையும் சமர்ப்பிக்க வேண்டும். |
| | II. | இரும்பு சார்ந்த (Ferrous) மற்றும் இரும்பு சாராத (Non- ferrous) பிரிவுகளின் பல்வேறு உலோக/கலவைப் பாகங்களை உடைத்துப் பார்ப்பதன் மூலமோ வேறு முறைகளிலோ அடையாளம் காணும் திறன். |
| | III. | இரும்பு அல்லாத உலோக உலைகள், குருசிபிள், குருசிபிள் இல்லா, எண்ணெய் எரிபொருள் உலைகள் மற்றும் கியுபோலா உலைகளை இயக்கி, பழுதுபார்த்து, பராமரிக்கும் திறன். |
| | IV. | கியுபோலா உலைக்கான காற்றூட்டிகள், எரிப்பான்கள், தூக்கி, உலையில் பொருள் செலுத்தும் மற்றும் எடையிடும் உபகரணங்களை இயக்கும் திறன். |
| | V. | உருகிய உலோக வெப்பநிலையை பைரோமீட்டர் மூலம் அளக்கும் அடிப்படை அறிவு. |
| | VI. | கியுபோலா உலையிலிருந்து வெளியேறும் உருகிய உலோகம் அல்லது புகையைப் பார்த்து வெப்பநிலையை மதிப்பிடும் அறிவு. |

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *தொழிற்தகைமைகள்* |
|---|---|
| | VII. உருக்கத்திற்கான எரிபொருள் உலோக விகிதங்களையும் பொருளாதார ரீதியில் பயனுள்ள அளவுகளையும் அறிந்திருத்தல். |
| பொதுப் பொருத்துநர் (Fitter - General) | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| கனரக வாகன இயக்குநர் (Heavy Vehicle Operator) | I. அங்கீகரிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் கனரக வாகன இயக்கத்தில் குறைந்தது பத்து (10) வருட அனுபவம்.<br>II. கனரக வாகன பராமரிப்பில் அடிப்படை அறிவு<br>III. பிரைம் மூவர் டிரெய்லர் இயக்கும் திறன்.<br>IV. கிரேன் இயக்கும் திறன்.<br>V. லாரி மற்றும் போர்க்லிஃப்ட் (forklift) இயக்கும் திறன்.<br>VI. NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி. |
| குழாய் பொருத்துநர் (Pipe Fitter) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழுடன் பின்வரும் தகைமைகள் வேண்டும்.<br>II. தொழிலுக்குரிய வரைபடங்களை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்.<br>III. சூடான மற்றும் குளிர்ந்த நீர் விநியோக குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>IV. கழிவுநீர் வெளியேற்றக் குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>V. குளிரூட்டப்பட்ட நீர் (Chill Water) குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>VI. நீராவி குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>VII. அழுத்தப்பட்ட காற்றுக் குழாய் அமைப்புகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>VIII. தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களை பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>IX. நீர்ப்பம்பிகளை பொருத்துதல் மற்றும் பராமரித்தல். |
| இயந்திர இயக்குநர்- உற்பத்தி (Machine Operator - Production) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது. இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழுடன் பின்வரும் திறன்களுக்கான சான்றுகள் வேண்டும்.<br>II. வரைபடங்களை வாசித்துப் புரிந்துகொள்ளுதல்,<br>III. போல்ட் வடிவமைக்கும் இயந்திரத்தை இயக்கக்கூடியவராக இருத்தல்<br>IV. திரவ அழுத்த இயந்திரங்களை இயக்கக்கூடியவராக இருத்தல்.<br>V. கொல்லர் தொழிலுக்கான வடிவமைக்கும் இயந்திரங்கள் மற்றும் அழுத்தும் இயந்திரங்களை இயக்கக்கூடியவராக இருத்தல்.<br>VI. இயந்திர வேகத்தைச் சீரமைத்தல்.<br>VII. உற்பத்தி இயந்திரங்களை இயக்கிப் பராமரித்தல்.<br>VIII. உற்பத்திப் பொருட்களின் விவரக்குறிப்புகளைச் சோதித்து உற்பத்தி அறிக்கைகள் தயாரித்தல். |
| இயந்திர வல்லுநர் (Machinist) | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| மரவேலை இயந்திர வல்லுநர் (Machinist-Wood) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் உரிய அனுபவமும் வேண்டும்.<br>II. குறித்த தொழிலுக்கு தொடர்புடைய கருவிகள் மற்றும் இயந்திரங்களின் பராமரிப்பு தொடர்பாக சிறந்த அறிவைக் கொண்டிருக்க வேண்டும்.<br>III. குறித்த தொழிலுடன் தொடர்புடைய அடிப்படை அறிவு மற்றும் அடிப்படைக் கோட்பாடுகள் தொடர்பாக போதிய அறிவைக் கொண்டிருக்க வேண்டும்.<br>IV. தொழிலுடன் தொடர்புடைய வரைபடம் / திட்டத்தை வாசித்து புரிந்து கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும். |

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *தொழிற்தகைமைகள்* |
|---|---|
| | V. கீழே குறிப்பிடப்பட்டுள்ள இயந்திரங்களில் (f) உட்பட குறைந்தபட்சம் 05 இயந்திரங்களை மிகக் குறுகிய காலத்திற்குள் திறம்பட இயக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>a. மோர்டைசிங் இயந்திரம் (Mortising Machine)<br>b. டெனனிங் இயந்திரம் (Tennoning Machine)<br>c. எளிய மோல்டிங் இயந்திரம்<br>d. சாண்டிங் இயந்திரம்<br>e. மரம் துளையிடும் / மர வேலைப்பாடு செய்யும் இயந்திரம்<br>f. மரத்தின் மேற்பரப்பை சமப்படுத்தி, தடிமனைக் குறைக்கும் இயந்திரம் |
| வார்ப்புத் தொழிலாளர் (Foundry Man) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் பின்வரும் திறன்களும் வேண்டும்.<br>II. இரும்பு சார்ந்த (Ferrous) மற்றும் இரும்பு சாராத (Non-Ferrous) உலோக வார்ப்புகளுக்கான மண் மற்றும் கலவைகளின் பொருத்தமான விகிதத்தைத் தீர்மானித்து, தேவையான வார்ப்பு அச்சுகளைத் தயாரிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>III. இரும்பு சார்ந்த (Ferrous) மற்றும் இரும்பு சாராத (Non-Ferrous) உலோகங்களுக்கான பல்வேறு வகையான Core மற்றும் வார்ப்பு அச்சுகளைத் தயாரிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>IV. லோம் மண்ணைப் பயன்படுத்தி வார்ப்பு அச்சுகளைத் தயாரிப்பது தொடர்பான அறிவு கொண்டிருக்க வேண்டும்.<br>V. வார்ப்பு அச்சுப் பெட்டி சட்டங்கள், உயர்த்திகள் மற்றும் அடித்தட்டுகள் போன்றவற்றைத் தயாரித்து மேம்படுத்தி. பொருளாதார ரீதியாகப் பயன்படுத்தக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>VI. உருக்கப்பட்ட உலோகத்தைப் பரிசோதித்து, வார்ப்பு அச்சுகளில் ஊற்றுவதற்கான சரியான நேரத்தைத் தீர்மானித்து, உதவியாளர்களை வழிநடத்தி வார்ப்புகளைப் பெறக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>VII. இரும்பு சார்ந்த (Ferrous) மற்றும் இரும்பு சாராத (Non-Ferrous) உலோக வார்ப்புகளில் பயன்படுத்தப்படும் chilling தொழில்நுட்பம் தொடர்பான அறிவு கொண்டிருக்க வேண்டும்.<br>VIII. உட்கரு தயாரித்தல் தொடர்பான நல்ல அறிவு கொண்டிருக்க வேண்டும். |
| வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் (Pattern Maker) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது ஒரு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் பின்வரும் திறன்களும் வேண்டும்.<br>II. தொழிலுடன் தொடர்புடைய வரைபடங்களை வாசித்து புரிந்து கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>III. பல்வேறு உலோகங்களுக்கான சுருக்க விதிகள் பயன்படுத்தத் தெரிந்திருக்க வேண்டும்.<br>IV. பல்வேறு உலோகங்கள் மற்றும் வார்ப்பு தயாரித்தல் தொடர்பான நல்ல அறிவு கொண்டிருக்க வேண்டும்.<br>V. கோர் பிரிண்ட் பயன்படுத்தி, வழங்கப்பட்ட வரைபடத்திற்கு ஏற்ப வார்ப்பு மாதிரிகளை தயாரிக்கக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>VI. அனைத்து வகையான வார்ப்பு மாதிரிகள் மற்றும் பல்வேறு சுருக்க அளவுகள் தொடர்பான நல்ல அறிவு கொண்டிருக்க வேண்டும். |
| நீர்க்குழாய் தொழிலாளர் (Plumber) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது. ஒரு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் பின்வரும் திறன்களும் வேண்டும்.<br>II. தொழிலுடன் தொடர்புடைய வரைபடங்களை வாசித்து புரிந்து கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும்.<br>III. வீட்டு நீர்க்குழாய் அமைப்புகள் மற்றும் நீர்ப்பம்பிகளைப் பொருத்துதல், பழுதுபார்த்தல் தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டும். |

| *அங்கீகரிக்கப்பட்ட பதவிப் பெயர்* | *தொழிற்தகைமைகள்* |
|---|---|
| | IV. கழிவுநீர் வடிகால் அமைப்புகளைப் பொருத்துதல் தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டும்.<br>V. வீட்டு கழிவுநீர் மற்றும் கழிவகற்றல் அமைப்புகளைப் பொருத்துதல், பராமரித்தல் தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டும்.<br>VI. பல்வேறு வகையான குழாய்கள் மற்றும் உபகரணங்கள், குறிப்பாக எஃகு குழாய்கள், பொருத்துதல் தொடர்பான அறிவும் அனுபவமும் கொண்டிருக்க வேண்டும். |
| பற்றவைப்பாளர் (Welder) | NVQ நான்காம் மட்டத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| தச்சர் - தளபாடங்கள் (Carpenter - Furniture) | I. அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் குறைந்தது. இரண்டு வருடப் பாடநெறியை முடித்த சான்றிதழும் பின்வரும் திறன்களும் வேண்டும்.<br>II. தொழில் தொடர்பான வரைபடங்களை வாசித்து புரிந்துகொள்ளும் திறன்.<br>III. பல்வேறு மர வகைகள் மற்றும் அவற்றின் தரம், பயன்பாடு தொடர்பான அறிவு.<br>IV. பல்வேறு மர இணைப்புகள் மற்றும் அவற்றை உருவாக்கும் முறைகள் தொடர்பான அறிவு.<br>V. மரப் பொருட்களுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கும் திறன்.<br>VI. மரப் பலகைகளால் மரப் பொருட்களைத் தயாரிக்கும் திறன்.<br>VII. மரக் கட்டைகள் மற்றும் பலகைகளால் மரப் பொருட்களைத் தயாரிக்கும் திறன்.<br>VIII. இயந்திரத்தில் செயலாக்கப்பட்ட மரம் மற்றும் பலகைகளால் மரப் பொருட்களைத் தயாரிக்கும் திறன்.<br>IX. இயந்திரங்கள், கருவிகள் மற்றும் Power Tools-ஐப் பராமரித்தல் மற்றும் கருவிகளைக் கூர்மைப்படுத்தும் திறன். |

(III) **அனுபவம் :**

அரசாங்க அல்லது தனியார் நிறுவனமொன்றில் உரிய துறையில் இரண்டு (02) வருட அனுபவம் மேலதிகத் தகைமையாகக் கருதப்படும்.

(IV) **உடற்தகைமை :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் பணியாற்றவும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும் போதிய உடல் மற்றும் உளத் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

(V) **ஏனையவை :**

i. இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

ii. விண்ணப்பதாரர் சிறந்த நற்குணமுடையவராக இருக்க வேண்டும்.

iii. பதவிக்கு ஆட்சேர்ப்பதற்குத் தேவையான அனைத்து தகைமைகளும் விண்ணப்ப அறிவித்தல்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் 2026.09.25 ஆந் திகதியன்று எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

9.0 **வயது** :

விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

10.0 **ஆட்சேர்ப்புமுறை** :

தொழில் செய்முறைப் பரீட்சை மற்றும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

10.1.1 **தொழில் செய்முறைப் பரீட்சை :**

| *பதவிப் பெயர்* | *வினாத் தாள்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|---|
| உட்கரு தயாரிப்பாளர் (Core Maker) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. கோர் மணல் கலவையைத் தயாரித்து, அழுத்தி அமைத்து, காற்றோட்டம் மற்றும் உலோகப் பாய்ச்சல் வழிகளுடன் கோர் பெட்டியைத் தயாரித்தல்.<br>b. இரும்பு மற்றும் இரும்பு சாராத உலோக வேலைகளுக்குத் தேவையான கோர் மணல், பசை மற்றும் மேற்பூச்சுக் கலவைகளைச் சரியான விகிதத்தில் தயாரித்தல்.<br>c. சிக்கலான மற்றும் பல கோர்கள் கொண்ட வேலைகளில், தேவையான வார்ப்புருக்கள் மற்றும் அளவீட்டுக் கருவிகளைப் பயன்படுத்தி கோர்களை அமைத்தல்.<br>d. எண்ணெய் மணல் கலவையைத் தயாரித்து, அதைப் பயன்படுத்தி கோர்களை உருவாக்குதல். | 01 மணித் தியாலம் | 100 | 40 |
| உலோகப் புனைவாளர் (Fabricator - Metal) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய் முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்<br>a. உலோகத்தை வெட்டுவதற்காக அடையாளமிடுதல்.<br>b. தயாரிக்கப்பட்ட உலோகப் பாகங்களை ஒன்றுசேர்த்தல். | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| உலை இயக்குநர் (Furnace man) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. விவரக்குறிப்பின்படி தேவையான உலோகங்கள் மற்றும் சேர்மப் பொருட்களைப் பயன்படுத்தி உருக்கு உலையை முறையாக இயக்குதல்.<br>b. இரும்பு மற்றும் இரும்பு சாராத உலோகங்கள் மற்றும் உருக்கு உலைக்கான சரியான கோக் தரத்தை அடையாளம் காணுதல்.<br>c. உலோகங்களைச் சேர்த்து உருக்கி, கழிவுகளை அகற்றி, உருகிய உலோகத்தைப் பெற்று, உலையை நிறுத்தி வார்ப்பு செய்தல்.<br>d. உருக்கு உலைக்குரிய காற்றூதிகள், எரிப்பான்கள், தூக்கி, மூலப்பொருள் செலுத்தும் மற்றும் எடை போடும் கருவிகளை இயக்குதல்..<br>e. பல்வேறு உலோகங்கள் மற்றும் உலோகக் கலவைகளை உடைத்தல் அல்லது பிற முறைகள் மூலம் அடையாளம் காணுதல். | 01 மணித்தியாலம் | 100 | 40 |

| பதவிப் பெயர் | வினாத் தாள் | பாடத்திட்டம் | காலம் | மொத்தப் புள்ளிகள் | சித்திப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|
| பொதுப் பொருத்துநர் (Fitter - General) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. இயந்திர உபகரணங்களையும் டை பாகங்களையும் ஒன்று சேர்த்து நிறுவுதல்.<br>b. இயந்திரப் பராமரிப்பில் நல்ல அறிவு. | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| கனரக வாகன இயக்குநர் (Heavy Vehicle Operator) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. பயணிகள் பேருந்தை ஓட்டுதல்.<br>b. சரக்கு லொறியை ஓட்டுதல்.<br>c. போர்க்லிஃப்ட் இயந்திரத்தை இயக்குதல்.<br>d. கனரக வாகனப் பராமரிப்பில் அடிப்படை அறிவு. | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| குழாய் பொருத்துநர் (Pipe Fitter) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. சூடான மற்றும் குளிர்ந்த நீர் வழங்கல் குழாய்களைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>b. கழிவுநீர் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>c. குளிர்ந்த நீர் குழாய்களைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>d. நீராவிக் குழாய் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>e. அழுத்தக் காற்றுக் குழாய் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>f. தீயணைப்பு உபகரணங்கள் மற்றும் சாதனங்களைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>g. எரிவாயு வழங்கல் குழாய் அமைப்புகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல்.<br>h. நீர்ப்பம்பிகளைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல். | 01 மணித்தியாலம் | 100 | 40 |

| *பதவிப் பெயர்* | *வினாத் தாள்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|---|
| இயந்திர இயக்குநர் - உற்பத்தி (Machine Operator - Production) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. உலோக வடிவமைப்பு இயந்திரங்கள் மற்றும் அழுத்தி இயந்திரங்களை இயக்கி, தினசரி பராமரித்தல்.<br>b. போல்ட் தயாரிக்கும் இயந்திரங்களை இயக்கி, பராமரித்தல்.<br>c. திரவ அழுத்த இயந்திரங்களை இயக்கி, தினசரி பராமரித்தல். | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| இயந்திர வல்லுநர் (Machinist) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. லேத் இயந்திரப் பணிகளில் நல்ல அனுபவம் பெற்றிருத்தல்.<br>b. துளையிடுதல் மற்றும் அது தொடர்பான பணிகளில் நல்ல அனுபவம் பெற்றிருத்தல்.<br>c. லேத் மற்றும் துளையிடும் கருவிகளைக் கூர்மைப்படுத்துவதில் அனுபவம் பெற்றிருத்தல். | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| மரவேலை இயந்திர வல்லுநர் (Machinist - Wood) | பாட அறிவு | கீழே குறிப்பிடப்பட்டுள்ள 06 மரவேலை இயந்திரங்களில், தடிமனை சமப்படுத்தும் இயந்திரம் உட்பட குறைந்தது 05 இயந்திரங்களை இயக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும்.<br>a. மோர்டைசிங் இயந்திரம். (Mortising Machine)<br>b. டெனனிங் இயந்திரம். (Tennoning Machine)<br>c. எளிய மோல்டிங் இயந்திரம்.<br>d. சாண்டிங் இயந்திரம்.<br>e. மர வேலைப்பாட்டு இயந்திரம்.<br>f. தடிமனை சமப்படுத்தும் இயந்திரம் | 01 மணித்தியாலம் | 100 | 40 |

| *பதவிப் பெயர்* | *வினாத் தாள்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|---|
| வார்ப்புத் தொழிலாளர் (Foundry Man) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. பச்சை மணல் அல்லது உலர் மணலைப் பயன்படுத்தி, இரண்டு அல்லது மூன்று பகுதிகளைக் கொண்ட நடுத்தர அளவிலான சிக்கலான வார்ப்பு அச்சை, இரும்பு அல்லது இரும்பு சாராத உலோகங்களுக்கு தயாரித்து, வார்ப்பு பரிசோதனைக்கு திருப்திகரமாகப் பயன்படுத்தல்.<br>b. இரண்டு அல்லது மூன்று பகுதிகளைக் கொண்ட வார்ப்பு அச்சைத் தயாரிக்க, பச்சை அல்லது உலர் மணலைச் சரியாகத் தயாரித்து, சிக்கலான அல்லது நடுத்தர அளவிலான இரும்பு அல்லது இரும்பு சாராத உலோக வார்ப்பு அச்சை உருவாக்குதல். | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| வார்ப்பு மாதிரி தயாரிப்பாளர் (Pattern Maker) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. கோர் பிரிண்டைப் பயன்படுத்தி, வழங்கப்பட்ட வரைபடத்திற்கு ஏற்ப வார்ப்பு மாதிரியைத் தயாரித்தல்.<br>b. வழங்கப்பட்ட வரைபடத்திற்கு ஏற்ப எந்தவொரு வகையான வார்ப்பு மாதிரியையும் தயாரித்தல். | 01 மணித்தியாலம் | 100 | 40 |
| நீர்க்குழாய் தொழிலாளர் (Plumber) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. வீட்டு நீர்க்குழாய் அமைப்புகளைப் புதிதாகப் பொருத்துதல், பழுது பார்த்தல் மற்றும் நீர்ப்பம்பிகளைப் பொருத்துதல்.<br>b. கழிவுநீர் கடத்தல் அமைப்புகளைப் பொருத்துதல்.<br>c. வீட்டு கழிவுநீர் மற்றும் கழிவகற்றல் அமைப்புகளைப் பொருத்தி பரா மரித்தல்.<br>d. பல்வேறு வகையான குழாய்கள் மற்றும் உபகரணங்கள், குறிப்பாக எஃகு குழாய்களைப் பொருத்துதல். | 01 மணித்தியாலம் | 100 | 40 |

| *பதவிப் பெயர்* | *வினாத் தாள்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|---|
| பற்ற வைப்பாளர் (Welder) | பாட அறிவு | பின்வரும் நான்கு தொழிற்பிரிவுகளில் செய்முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br><br>**NVQ நிலை 4 – வில் பற்றவைப்பு**<br>a. ஆக்சி–அசிட்டிலீன் வாயு மூலம் எஃகு வெட்டுதல்.<br>b. சமநிலை நிலையில் எஃகு தகடு களை கையேடு வில் முறையில் பற்ற வைத்தல் (1G, 1F).<br>c. கிடைமட்ட நிலையில் எஃகு தகடுகளை கையேடு வில் முறையில் பற்றவைத்தல்.<br>d. செங்குத்து நிலையில் எஃகு தகடு களை கையேடு வில் முறையில் பற்ற வைத்தல் (3G).<br>e. மேல்நிலை முறையில் எஃகு தகடு களை கையேடு வில் முறையில் பற்ற வைத்தல் (4G).<br>f. சால்டரிங் மற்றும் பிரேசிங் செய்தல்.<br><br>**NVQ நிலை 4 – டிக் பற்றவைப்பு**<br>a. ஆக்சி–அசிட்டிலீன் வாயு மூலம் எஃகு வெட்டுதல்.<br>b. சமநிலை நிலையில் எஃகு தகடுகளை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல்.<br>c. கிடைமட்ட நிலையில் எஃகு தகடுகளை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல்.<br>d. செங்குத்து நிலையில் எஃகு தகடுகளை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல் (3G).<br>e. மேல்நிலை முறையில் எஃகு தகடுகளை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல் (4G).<br>f. அனைத்து நிலைகளிலும் எஃகு குழாய்களை ஆக்சி–அசிட்டிலீன் வாயு முறையில் பற்றவைத்தல் (6G). | 01 மணித்தி யாலம் | 100 | 40 |

| *பதவிப் பெயர்* | *வினாத் தாள்* | *பாடத்திட்டம்* | *காலம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|---|
| தச்சர் - தளபாடங்கள் (Carpenter - Furniture) | பாட அறிவு | பின்வரும் துறைகளில் இரண்டில் செய் முறைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும்.<br>a. மரப் பொருட்களுக்கான மதிப்பீடு தயாரிக்கும் திறன்.<br>b. மரப் பலகைகளால் மரப் பொருட்கள் தயாரிக்கும் திறன்.<br>c. மரக் கட்டைகள் மற்றும் பலகைகளால் மரப் பொருட்கள் தயாரிக்கும் திறன்.<br>d. செயலாக்கப்பட்ட மரம் மற்றும் பலகைகளால் மரப் பொருட்கள் தயாரிக்கும் திறன்.<br>e. இயந்திரங்கள், கருவிகள் மற்றும் மின்சாரக் கருவிகளைப் பராமரிக்கும் திறன். | 01 மணித்தியாலம் | 100 | 40 |

10.1.2 **தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை :**

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்* | *அதிகபட்சப் புள்ளிகள்* | *புள்ளிகள் வழங்கும் முறை* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | க.பொ.த. (உயர்தர) பரீட்சையின் பொதுப் பரீட்சையைத் தவிர சித்தியடைந்த ஒவ்வொரு பாடத்திற்கும் 02 புள்ளிகள். | 06 |
| | | அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பெற்ற டிப்ளோமா அல்லது சான்றிதழ் நெறிகள்:<br>i. 03-06 மாதங்கள் - 04 புள்ளிகள்<br>ii. 06-12 மாதங்கள் - 08 புள்ளிகள்<br>iii. 12 மாதங்கள் அல்லது மேல்- 14 புள்ளிகள் | 14 |
| சேவை அனுபவம் | 40 | அரசாங்க அல்லது தனியார் நிறுவனமொன்றில் உரிய துறையில் ஒவ்வொரு வருட அனுபவத்திற்கும் 08 புள்ளிகள். | 40 |
| பயிற்சி நெறிகளைப் பின்பற்றியிருத்தல் | 15 | அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பொறியியல் துறையில் பயின்ற பயிற்சி நெறிகள்:<br>i. ஒரு மாதத்திற்குக் குறைவு -02 புள்ளிகள்<br>ii. 01-03 மாதங்கள் - 05 புள்ளிகள்<br>iii. 03-06 மாதங்கள் - 10 புள்ளிகள்<br>iv. 06 மாதங்களுக்கு மேல் - 15 புள்ளிகள் | 15 |

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள்* | *அதிகபட்சப் புள்ளிகள்* | *புள்ளிகள் வழங்கும் முறை* | *புள்ளிகள்* |
|---|---|---|---|
| பாடசாலைச் சாராத செயற்பாடுகள் | 20 | விளையாட்டுச் சான்றிதழ்களுக்கு: மாகாண மட்ட வெற்றிக்கு 05 புள்ளிகளும் அகில இலங்கை மட்ட வெற்றிக்கு 10 புள்ளிகளும் (ஒன்று அல்லது அதற்கு மேல்) வழங்கப்படும். பாடசாலை மாணவர் தலைவர் பதவிக்கு 05 புள்ளிகள் வழங்கப்படும். | 20 |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமை | 05 | நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைக் கேற்ப புள்ளிகள் வழங்கப்படும். | 05 |
| மொத்தம் | | | 100 |

**குறிப்பு -** பதவிக்குரிய அனுபவம் ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அத்தகைமைகள் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதியான 2026.10.23 அன்று செல்லுபடியாக இருக்க வேண்டும்.

11.0 அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 01/2020 இன் ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனை பெற்றிருக்கக் கூடாது.

12.0 விண்ணப்பத்தை நிரப்பும்போது மிகவும் கவனமாகச் சரியான தகவல்களை வழங்க வேண்டும். தகைமைகளைச் சரிபார்க்கும்போது விண்ணப்பதாரர் தகுதியற்றவர் எனத் தெரியவந்தால் எந்த நிலையிலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரர் வழங்கிய தகவல் ஏதேனும் பொய்யானது எனப் பின்னர் தெரியவந்தால் அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

13.0 விண்ணப்பம் குறிப்பிடப்பட்ட மாதிரிப்படிவத்திற்கமையச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அறிவித்தலுடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கு அமைவில்லாத மற்றும் பூர்த்தியற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

14.0 விண்ணப்பதாரரின் கையொப்பம் அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியிலுள்ள உத்தியோகத்தர் அல்லது அரசின் நிரந்தர பதவியிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரால் சான்றுப்படுத்தப்பட்டிருக்க வேண்டும்.

15.0 இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தகைமைகள் உடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற அனுமானத்தின் அடிப்படையில், உரிய திகதியில் அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த அனைவரும் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் தொழில் செய்முறைப் பரீட்சைக்கும் தகைமை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கும் அழைக்கப்படுவர். எனினும், அவ்வாறு அழைப்பது விண்ணப்பதாரர் இப்பதவிக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளதாக ஏற்றுக்கொள்ளப்படாது. நேர்முகப் பரீட்சையின்போது அறிவித்தலுக்கமையத் தேவையான தகைமைகள் இல்லை எனத் தெரியவந்தால் அவர்களின் விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும்.

16.0 விண்ணப்பதாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்குப் பின்வரும் ஆவணங்களில் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்:

I. ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;

II. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்;

III. செல்லுபடியான கடவுச்சீட்டு.

17.0 இங்கு குறிப்பிடப்படாத ஏதேனும் விடயம் இருப்பின் அதுகுறித்த இறுதித் தீர்மானம் அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும். அனைத்து விண்ணப்பதாரர்களும் இவ்வறிவித்தலில் கூறப்பட்டுள்ள பொது விதிகளின்படி செயல்படக் கட்டுப்பட்டுள்ளனர்.

18.0 விண்ணப்பிக்கும் முறை :

அனைத்து விபரங்களையும் உள்ளடக்கி இத்துடன் இணைக்கப்பட்ட மாதிரி விண்ணப்பத்திற்கமையப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை, கல்வித் தகைமைகள், தொழிற்தகைமைகள், சேவை அனுபவம், பயிற்சி நெறிகள் மற்றும் பாடசாலைச் சாராத செயற்பாடுகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2026, ஒற்றோபர் 23 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு "பணிப்பாளர் நாயகம், அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம், கொலன்னாவ வீதி, கொலன்னாவ" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பம் இடப்படும் உறையின் இடது மேல் மூலையில் "ஆரம்பநிலை திறன்சார் சேவை வகையின் III ஆம் தரப் பதவிகளுக்கான திறந்த ஆட்சேர்ப்பு - 2026" எனத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பொறி. எஸ். என். பி. எம். பத்மசிறி,
பணிப்பாளர் நாயகம்.

அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,
கொலன்னாவ வீதி,
கொலன்னாவ,
2026, செத்தெம்பர் 21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| |
|---|
| |

அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்

**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் ஆரம்பநிலை திறன்சார் சேவை வகைப் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு - 2026**

Recruitment to the posts in the Primary Skilled Service Category of the Department of Government Factory - 2026

விண்ணப்பிக்கும் மொழி மூலம்:

சிங்களம் - 2

தமிழ் - 3 ☐

ஆங்கிலம் - 4

(பொருத்தமான இலக்கத்தை கட்டத்திற்குள் எழுதவும்)

பதவிக்குரிய தொடர் இலக்கம் ☐

விண்ணப்பிக்கும் பதவி : ..........................................................................................................................................

(ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனி விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

1. (அ) முழுப் பெயர் (ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துகளில்):

..........................................................................................................................................

(உதா: HERATH MUDIYANSELAGE SAMAN RATHNAYAKA)

(ஆ) முதலெழுத்துகளுடன் பெயர் (ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துகளில்):

..........................................................................................................................................

(உதா: H. M. S. RATHNAYAKA)

(இ) முழுப் பெயர் (சிங்களத்தில் / தமிழில்):

..........................................................................................................................................

2. (அ) நிரந்தர முகவரி (சிங்களத்தில் / தமிழில்):
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

(ஆ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலப் கெப்பிட்டல் எழுத்துகளில்):

..........................................................................................................................................................
..........................................................................................................................................................

(இ) அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில் / தமிழில்): ..................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

3. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

4. பால் : பெண் - 0
ஆண் - 1 ☐
(பொருத்தமான இலக்கத்தை கட்டத்திற்குள் எழுதவும்)

5. பிறந்த திகதி : வருடம்: ☐☐☐☐ மாதம்: ☐☐ திகதி: ☐☐

6. விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதியன்று வயது :

வருடங்கள் : ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள்: ☐☐

7. தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

8. கல்வித் தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்)

a. க.பொ.த. (சாதாரண தர) பரீட்சை விபரங்கள்

I. முதல் தடவை பெறுபேறுகள்

பரீட்சை சுட்டெண் : ................................................
வருடம் ....................... மாதம் .........................

| *பாடம்* | *சித்தி* | *பாடம்* | *சித்தி* |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

II. இரண்டாம் தடவை பெறுபேறுகள்

பரீட்சை சுட்டெண் : ................................................
வருடம் ....................... மாதம் ........................

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

b. க.பொ.த. (உயர்தர) பரீட்சை விபரங்கள்

I. பரீட்சை நடைபெற்ற வருடமும் மாதமும் : ...............................................

II. பரீட்சை சுட்டெண் : ...............................................

பெறுபேறுகள்

| *பாடம்* | *சித்தி* |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

9. மேலதிக கல்வித் தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

| *தொடர் இலக்கம்* | *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்* | *கால எல்லை* | *சான்றிதழின் செல்லுபடித் திகதி* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

10. தொழிற் தகைமைகள்: (பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்.)

| *தொடர் இலக்கம்* | *நிறுவனம்* | *பாடநெறியின் பெயர்* | *NVQ மட்டம்* | *கால எல்லை* | *சான்றிதழின் செல்லுபடித் திகதி* |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

11. பதவிக்குரியதாகப் பெற்றுள்ள சேவை அனுபவம்:

| தொடர் இலக்கம் | சேவைக் காலம் | | பதவி | பணியிடம் |
|---|---|---|---|---|
| | முதல் | வரை | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

12. பாடசாலைச் சாராத செயற்பாடுகள்: ..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................
..........................................................................................................

13. தற்போது ஏதேனும் அரச நிறுவனத்தில் பதவி வகித்தால் அதன் விபரங்கள்:

I. பதவியும் தரமும் : ..........................................................................................
II. நியமனத் திகதி : ..........................................................................................
III. நிறுவனம் :..........................................................................................
IV. ஓய்வூதிய உரிமையுள்ள நிரந்தர பதவியா? :..........................................................................................

14. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தால் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளீர்களா? (பொருத்தமான கட்டத்தில் √ குறியிடவும்.)

ஆம் எனில் விபரங்களைக் குறிப்பிடவும்.

ஆம் ☐ இல்லை ☐

..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

15. விண்ணப்பதாரரின் உறுதிமொழி

(அ) இந்த விண்ணப்பத்தில் நான் வழங்கியுள்ள தகவல்கள் எனது அறிவிற்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என மரியாதையுடன் உறுதிப்படுத்துகிறேன். இதன் ஏதேனும் பகுதியை நிரப்பாமையால் மற்றும்/ அல்லது தவறாக நிரப்பியதால் ஏற்படக்கூடிய இழப்பை ஏற்றுக்கொள்கிறேன். மேலும், அனைத்து பகுதிகளும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன எனவும் அறிவிக்கிறேன்.

(ஆ) நான் வழங்கிய இந்த உறுதிமொழி பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், நியமனத்திற்கு முன் தகுதியற்ற வராவேன் என்றும் நியமனத்தின் பின்னர் சேவையிலிருந்து நீக்கப்படலாம் என்றும் அறிவேன்.

(இ) இங்கு குறிப்பிடப்பட்ட எந்தத் தகவலையும் பின்னர் மாற்றமாட்டேன்.

(ஈ) கல்வி மற்றும் தொழிற்றகைமைகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்துச் சமர்ப்பிக்கிறேன்.

திகதி: ................................... ...............................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

16. விண்ணப்பதாரரின் கையொப்பத்தைச் சான்றுப்படுத்தல்: (பொருத்தமற்ற சொற்களை நீக்கவும்)

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ................................................................................................ எனும் திரு./ திருமதி/செல்வி அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும், அவர் ................................ ஆம் திகதி என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் சான்றுப்படுத்துகிறேன்.

திகதி: ....................................... .....................................................
சான்றுப்படுத்துபவரின் கையொப்பம்

சான்றுப்படுத்துபவரின் பெயர் : ..........................................................................................................
பதவி : ..........................................................................................................
முகவரி : ..........................................................................................................
உத்தியோகபூர்வ முத்திரை : ..........................................................................................................

குறிப்பு - விண்ணப்பம் வர்த்தமானி அறிவித்தலின் 14 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு சான்றுப்படுத்தப்பட வேண்டும்.

17. அரசாங்க சேவை / மாகாண அரசாங்க சேவையில் பணிபுரிபவராக இருப்பின், நிறுவனத் தலைவரின் சான்றிதழ்:

இந்த விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ................................................................................................ எனும் திரு./ திருமதி/செல்வி அவர்கள் இவ்வமைச்சு/திணைக்களம்/கூட்டுத்தாபனம்/சபையில் .................................... பதவியில் பணிபுரிகிறார். அவர் மேற்படி பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் இந்நிறுவனச் சேவையிலிருந்து விடுவிக்க முடியும் / முடியாது என்பதைத் தெரிவிக்கிறேன்.

.....................................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்

நிறுவனத் தலைவரின் பெயர் : ...........................................................................................
பதவி : ...........................................................................................
பணியிட முகவரி : ...........................................................................................
உத்தியோகபூர்வ முத்திரை : ...........................................................................................

09-339

## இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் சாரதி பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டி பரீட்சைக்கான விண்ணப்பங்களை கோரல் - 2026

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26(1) பிரிவின்படி, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முதன்மை நிலை (தொழில்முறை) தரம் III சாரதி பதவியின் பணியிடங்களில் உள்ள 46 வெற்றிடங்களை நிரப்ப இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **ஆட்சேர்ப்புக்கு அவசியமான தகைமைகள்:**

1.1 **கல்வித் தகைமைகள் :**

சிங்களம் / தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் இரண்டு திறமைச் சித்திகளுடன் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாமல் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

1.2 **தொழில்சார் தகைமைகள்:**

கனரக வாகனங்களை ஓட்டுவதற்காக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரத்தினை பெற்றிருத்தல் வேண்டும்.

1.3 **அனுபவம்:**

வாகன சாரதியான மூன்று ஆண்டுகள் (பகுதி/ தொடர்ச்சியான) அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும் (அனுபவச் சான்றிதழ்கள் மூலம் நிரூபிக்கப்படல் வேண்டும்).

1.4 **உடல்சார் தகைமை**:

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடன் இருத்தல் வேண்டும். இரவும் பகலும் நல்ல கண்பார்வை இருக்க வேண்டும், மேலும் அது மருத்துவச் சான்றிதழ் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும். 5 அடி உயரம் இருத்தல் வேண்டும்.

1.5 **ஏனையவை** :

I. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

II. விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

III. விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள இறுதித் திகதியன்று, விண்ணப்பதாரிகள் பதவிக்கான ஆட்சேர்ப்புக்குத் தேவையான தகைமைகள் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

2. **வயதெல்லை :**

- ஆகக் குறைந்த எல்லை: 25 வருடங்கள்
- உச்ச எல்லை: 45 வருடங்கள்

3. **சம்பளத் திட்டம்** :

ரூபா 43,280.00 -10 x 490 - 10 x 540 - 10 x 590 - 12 x 630 - ரூபா 67,040.00 அதன்படி, இந்தப் பதவிக்கான சம்பளக் குறியீடு AC-PL-3-2025 மற்றும் ஆரம்பச் சம்பளப் படிநிலை ரூபா 43,280.00 ஆகும். மேலும், 2026.03.17 ஆம் திகதியன்று பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட, இப்பதவிக்குப் பொருந்தக்கூடிய இதர படிகளும் வழங்கப்படும். (2027.01.01-க்கு முன்னர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டால், சம்பள விகிதத்தின் அட்டவணை II இன் படி சம்பளம் வழங்கப்படும். அதாவது, வழங்கப்படும் சம்பளம் ரூபா 40,834.00 ஆக இருக்கும்.)

4. **ஆட்சேர்ப்பு முறை** :

100 வீதம் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

4.1 தொழில்கல்விப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப் பட்ட நேர்முகப் பரீட்சையை உள்ளடக்கியது.

4.1.1 **தொழில் கல்விப் பரீட்சை:**

| *புள்ளி வழங்கப்படும் தலைப்புகள்* | *உச்சப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|
| ஓட்டுநர் திறன் | 40 | 20 |
| நெடுஞ்சாலைப் போக்குவரத்து விதிகள் குறித்த நடைமுறை அறிவு | 40 | 20 |
| மோட்டார் இயந்திரவியல் விஞ்ஞானம் குறித்த அடிப்படை அறிவு | 20 | 10 |

4.1.2 **தொழிற்கல்வி நேர்முகத்தேர்வு சபை பின்வரும் அதிகாரிகளை உள்ளடக்குதல் வேண்டும்:**

i. ஆணைக்குழுவின் ஒரு நிறைவேற்றுத்தர அதிகாரி தலைவராக;

ii. மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஒரு மோட்டார் வாகன ஆய்வாளர்;

iii. போக்குவரத்து பொலிஸ் பிரிவின் ஒரு அலுவலர்.

4.1.3 **கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு :**

| *மதிப்பெண்கள் வழங்கப்படும் முக்கிய விடயங்கள்* | *உச்சப் புள்ளிகள்* | *தெரிவு செய்வதற்கு பரிசீலிக்கப்படும் ஆகக்குறைந்த புள்ளிகள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | 60 |
| மேலதிக சேவை அனுபவம் | 15 | |
| ஏனைய மொழித் தேர்ச்சி | 10 | |
| விடய அறிவு | 25 | |
| நேர்காணல் திறன்கள் | 30 | |
| மொத்த புள்ளிகள் | 100 | |

4.1.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு சபை மூன்று அங்கத்தவர்களை கொண்டது.

4.1.5

i. தொழில்முறைத் தேர்வில் 50 புள்ளிகளுக்கு மேல் பெற்று தகுதி பெற்ற விண்ணப்ப தாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர் வுக்கு அழைக்கப்படுவார்கள். தொழில்முறைத் தேர்வு மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வில் மிக உயர்ந்த தகுதியைக் காட்டும் விண்ணப்பதாரர் / விண்ணப்பதாரர்கள், வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப சாரதி தரம் III பதவிக்குத் தேர்ந்தெடுக்கப் படுவார்கள்.

ii. ஆட்சேர்ப்பின் போது, மேலே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள முக்கியப் பகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட உச்சப் புள்ளிகள் உள்ளடக்கப்பட்டு, கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வுக்கான விரிவான புள்ளித் திட்டத்தை அங்கீகரித்தல் ஆணைக்குழுவால் நடாத்தப்படும்.

5. **சேவையில் உள்ளீர்ப்பதற்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் :**

i. இந்த நியமனம், ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பட்டு, 2026.09.01 ஆந் திகதியிட்ட 2504/07 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டது.

ii. இந்தப் பதவி நிரந்தரமானது. ஊழியர் சேம நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி நலன்கள் உரித்தானது.

iii. இந்த நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது.

iv. ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பணிக்கமர்த்தப்பட்ட 3 வருடங்களுக்குள் செயல்திறன் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

v. தகுதிகாண் காலத்தின் முடிவில், திருப்திகரமான பணி, வருகை, நடத்தை மற்றும் செயலாற்றுகை தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பணி நிரந்தரமாக்கப்படும்.

vi. அரச கரும மொழி அல்லாத வேறு பயிற்று மொழியில் பணியில் சேர்ந்த அதிகாரிகள், தகுதிகாண் காலத்தில் அரச கரும மொழியில் பரிந்துரைக்கப்பட்ட தேர்ச்சியைப் பெற வேண்டும்.

vii. 2023-ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம், 2026.09.01 ஆம் திகதியிடப்பட்ட இல. 2504/07 வர்த்தமானி அறிவித்தலில் உள்ளீர்க்கப்பட்டுள்ள இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற் கான ஆணைக்குழுவின் விதிகள், தாபன விதிகள் கோவை பாகம் II, நிதிப்பிரமாணங்கள் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் அவ்வப்போது வெளியிடப்படும் விதிகள் மற்றும் சுற்றுநிருபங்களுக்கு இந்த நியமனம் உட்பட்டது.

viii. விண்ணப்பித்த மொழி மூலத்தை மாற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்படாது. மேலும், விண்ணப் பத்தில் குறிப்பிடப்பட்ட மொழியே நியமனம் பெறத் தகுதியுடையவராக இருப்பீர்கள்.

6. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :**

i. அனைத்து வகையிலும் முழுமையான விண்ணப் பங்களைச் சமர்ப்பித்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படு வார்கள்.

ii. தொழில்சார்/கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை யில் தங்களின் ஆளடையாளத்தை நிரூபிக்க, பின்வரும் ஆளடையாள ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் :

a) ஆட்பதிவு ஆணையரால் வழங்கப்பட்ட செல்லு படியாகும் தேசிய ஆளடையாள அட்டை;

b) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;

c) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

7. **விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் முறை :**

i. விண்ணப்பங்களை, "பணிப்பாளர் நாயகம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு, தபால் பெட்டி இல. 1431, 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07" என்ற முகவரிக்கு, 2026.10.16 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவம் இந்த அறிவிப்பின் இறுதியில் வழங்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பங்களை A4 அளவு தாளில் தயாரித்து ஆங்கிலத்தில் மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பித்தல் வேண்டும்.

iii. விண்ணப்பம் அடங்கிய உறையின் இடது மேல் மூலையில் “சாரதி பதவியின் தரம் III இற்கான ஆட்சேர்ப்பு” எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

i. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் கையொப்ப மானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர்/ சமாதான நீதவான் / சத்தியப்பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்த நொத்தாரிசு/ முப்படையைச் சேர்ந்த ஆணை பெற்ற உத்தியோகத்தர் ஒருவரால் அல்லது அரசாங்க அல்லது மாகாணப் பொதுச் சேவையில் நிரந்தரப் பதவியில் இருந்து, மாதம் ரூபா 71,240.00 அல்லது அதற்கு மேற்பட்ட ஒருங்கிணைந்த சம்பளம் பெறும் ஒரு அதிகாரியால் அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.

ii. தபாலில் தொலைந்து விட்டதாகவோ அல்லது தபாலில் தாமதமாகிய விண்ணப்பங்கள் குறித்த முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படாது. இறுதித் திகதி வரை விண்ணப்பங்களைத் தாமதப்படுத்தும் விண்ணப்பதாரர்கள் அதன் விளைவுகளைச் சந்திக்க நேரிடும்.

iii. விண்ணப்பத்துடன் பின்வரும் ஒவ்வொரு ஆவணத்தினதும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதி ஒன்றும் இணைக்கப்படல் வேண்டும், வேறு எந்த ஆவணங்களும் இணைக்கப்படக் கூடாது:

a) தேசிய ஆளடையாள அட்டையின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதி;

b) பிறப்புச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப் பட்ட பிரதி;

c) மேற்படி விண்ணப்பதாரியின் கல்வித் தகுதிகள் தொடர்பான சான்றிதழ்களின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகள்;

d) மேற்படி விண்ணப்பதாரியின் தொழிற் கல்வித் தகுதிகள் தொடர்பான சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்;

e) மேற்படி விண்ணப்பதாரியின் அனுபவத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகள் ;

f) விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன் ஒரு மாத காலத்திற்குள் பெற்றுக் கொண்ட மருத்துவ சான்றிதழ்களின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதிகள்

g) சமீபத்திய 2 நன்னடத்தைச் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகள்.

குறிப்பு:

விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளை சரி பார்ப்பதற்காக, நேர்முகத்தேர்வின் போது தொடர்புடைய ஆவணங்களின் மூலப்பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

9. **தவறான தகவல்களை வழங்குதல் :**

ஆட்சேர்ப்புக்கு முன்னர் உங்கள் விண்ணப்பத்தில் வழங்கப்பட்ட ஏதேனும் தகவல் தவறானது அல்லது பிழையானது எனக் கண்டறியப்பட்டால், உங்கள் பரீட்சார்தி தகுதி இரத்து செய்யப்படும். ஆட்சேர்ப்புக்குப் பிறகு அத்தகைய தவறான அல்லது பிழையான தகவல் கண்டறியப்பட்டால், தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு உங்களைப் பணியிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

10. வெற்றிடங்களை நிரப்புவது/நிரப்பாமல் விடுவது குறித்த இறுதி முடிவு, இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படும்.

11. ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் முடிவே இறுதியானது.

12. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை அல்லது வேறுபாடு இருப்பின், சிங்கள உரையே மேலோங்கும்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் கட்டளையின் படி,

ஆர்.எஸ்.ஏ. திசாநாயக்க,
பணியாளர் நாயகம்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
தபால் பெட்டி இல. : 1431,
36, மலலசேகர மாவத்தை,
கொழும்பு 07,
2026.09.

(அலுவலக பாவணைக்கு மட்டும் )

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு சாரதி பதவியின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை விண்ணப்பப்படிவம் - 2026**

மொழி

| | |
|---|---|
| சிங்களம் | |
| தமிழ் | |
| ஆங்கிலம் | |

(விண்ணப்படிவத்தை ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் நிரப்புதல் வேண்டும்)

| | | | |
|---|---|---|---|
| 1.0 | 1.1. | முழுப் பெயர் | |
| | 1.2. | முழுப் பெயர் (சிங்களம் / தமிழ்) | |
| | 1.3. | முதலெழுத்துக்களுடன் பெயர் | |
| 2.0 | 2.1. | நிரந்தர முகவரி | |
| | 2.2. | மாவட்டம் | |
| | 2.3. | மாகாணம் | |
| 3.0 | 3.1. | பாலினம் ஆண்/பெண் | |
| | 3.2. | தேசிய ஆளடையாள அட்டை இல. | |
| 4.0 | 4.1. | கையடக்க தொலைபேசி இல. / வட்ஸ்அப் இல. (whatsapp) | |
| | 4.2. | நிரந்தர தொலைபேசி இல. | |
| | 4.3. | மின்னஞ்சல் முகவரி | |
| 5.0 | 5.1. | பிறந்த திகதி | |
| | 5.2. | விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் வயது | வருடங்கள் : மாதங்கள் : நாட்கள்: |
| 6.0 | 6.1. | திருமணமானவர் / திருமணமாகாதவர் | |
| 7.0 | 7.1. | உயரம் | |
| 8.0 | 8.1. | இனம் | |
| 9.0 | 9.1. | மதம் | |

10.0 **கல்வித் தகைமைகள்:** மொழி மூலம்: ..............................................................

| க. பொ. த. (சாதாரண தரம்) வருடம் : .......................... | | .... பரீட்சை சுட்டெண்: ........................... | |
|---|---|---|---|
| *பாடம்* | *தரம்* | *பாடம்* | *தரம்* |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

11.0 **தொழில்சார் தகைமைகள் :**

......................................................................................................................................................

......................................................................................................................................................

12.0 **சேவை அனுபவம்:**

| *நிறுவனம்* | *காலம் (ஆண்டுகள்)* |
|---|---|
| | |
| | |
| | |

13.0 **மேலதிக கல்வித் தகைமைகள் (ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகுதிகளுக்கு அப்பாற்பட்ட கல்வித் தகைமைகள்):**

| *பரீட்சையின் பெயர்* | *பாடசாலை / நிறுவனம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| உ-ம் : க. பொ. த. (உயர் தரம்) | | |
| | | |
| | | |
| | | |

14.0. **மொழித்தேர்ச்சி :**

| *மொழி* | *தகைமையை நிரூபிக்க சமர்ப்பிக்க முடியுமான ஆவணம்* |
|---|---|
| (அ) சிங்கள மொழி | |
| (ஆ) தமிழ் மொழி | |
| (இ) ஆங்கில மொழி | |
| (ஈ) வேறு வெளிநாட்டு மொழி | |

15.0 **வேறு தகைமைகள் :**

.......................................................................................................................................................
.......................................................................................................................................................
.......................................................................................................................................................

16.0 **விண்ணப்பதாரரின் உறுதிமொழி:**

இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள், எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்று நான் உறுதியளிக்கிறேன். ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ, இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்களில் ஏதேனும் ஒன்று தவறானது அல்லது துல்லியமற்றது எனக் கண்டறியப்பட்டால், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு எனது அபேட்சகர் தகுதியை/அல்லது நியமனத்தை இரத்து செய்யும் உரிமையைக் கொண்டுள்ளது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக நடைமுறையில் உள்ள விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்குக் கட்டுப்படவும், விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின்படி நான் தகுதியற்றவன் எனக் கண்டறியப்பட்டால், ஆட்சேர்ப்புக்கு முன்னரோ அல்லது பின்னரோ எனது பரீட்சார்த்தி தகுதியை/அல்லது நியமனத்தை இரத்து செய்ய எடுக்கப்படும் எந்தவொரு முடிவுக்கும் உட்படுவதற்கும் நான் ஒப்புக்கொள்கிறேன்.

............................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி:..............................................

17. கையொப்பத்தை உறுதிப்படுத்துதல்:

இந்த விண்ணப்பத்தினை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ..............................................................., என்பவர் எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், .......................................... அன்று என் முன்னிலையில் கையொப்பமிட்டுள்ளார் என்றும் இதன்மூலம் உறுதிப்படுத்துகின்றேன்.

..................................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
மற்றும் அலுவலக முத்திரை

கையொப்பத்தைச் உறுதிப்படுத்துபவரின்; முழுப் பெயர் : ..........................................................................
.......................................................................................................................................................
பதவி : ......................................................................................
முகவரி : ...................................................................................
திகதி : ......................................................................................

09-342

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நிலவுகின்ற கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்று தர உத்தியோகத்தர் பதவியின் தரம் III சட்ட அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2026

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தில் நிறைவேற்று தர உத்தியோகத்தர் பதவியின் தரம் III சட்ட அலுவலர் பதவியில் நிலவுகின்ற 02 பதவி வெற்றிடங்களை திறந்த அடிப்படையின் கீழ் நிரப்புவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதி 2026.10.30 ஆகும்.

1. **பதவிக்குரிய பணிகள்:**

- கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் அதன் விடயப் பரப்புக்குட்பட்ட மாவட்ட அலுவலகங்கள், கமநல சேவை நிலையங்களின் சட்ட ரீதியான அலுவல்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல், சட்ட மூலங்கள், ஒழுங்குவிதிகள், அவதானிப்பு அறிக்கைகள், பதிலாள் பத்திரம் போன்ற சட்ட ரீதியான ஆவணங்களை தயாரித்தல்.

- சட்ட மா அதிபர் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு மற்றும் மனித உரிமைகள் முறைப்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் அதன் விடயப் பரப்புக்குட்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட நிறுவனங்களின் அலுவலர்கள் கடமை சார்ந்த விடயப் பரப்புடன் தொடர்புடைய விடயமொன்றின் அடிப்படையில் பிரதிவாதிகளாக்கப்படும் வழக்குகள் தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்குதல் மற்றும் வழக்குகளுக்கு தோற்றுதல்.

- தாபன விதிக் கோவையின் XXXIII அத்தியாயத்தின் 4-5-6-7 பிரிவுகள் மற்றும் தாபன விதிக் கோவையின் XI அத்தியாயத்தின் I ஆம் பிரிவிற்கமைய நடவடிக்கை மேற்கொள்வதற்குத் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல், வழிகாட்டல்களை வழங்குதல் மற்றும் அதனுடன் தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகள்.

2. **ஆட்சேர்த்துக்கொள்ளும் முறை:**

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகளிடையே அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகள் வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 7 இன் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள) புள்ளிகள் வழங்கும் நடைமுறைக்கமைய தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

நியமனம் வலுப்பெறும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

3. **தேவையான தகைமைகள்:**

3.1. **கல்வி / தொழில் தகைமைகள் :**

இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

3.2. **அனுபவம் :**

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் சட்டத்தரணியொருவராக மூன்று (03) வருடங்களுக்கு குறையாத முனைப்பான தொழில் அனுபவத்தைப் பெற்றிருத்தல். (முனைப்பான தொழில்சார் அனுபவத்தை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்படும் ஆவணங்களில் அனுபவத்தைப் பெற்றுக்கொண்ட காலப் பகுதி, உறுதிப்படுத்துபவரின் பதவி முத்திரை மற்றும் உறுதிப்படுத்திய திகதி என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.)

அல்லது

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டதன் பின்னர் அரச நிறுவனமொன்றில்* சட்டம் சார்ந்த பதவியொன்றில் மூன்று வருடங்களிலும் (03) குறையாத காலப் பகுதி அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

I. வழக்குகள் தொடர்பான சட்ட அலுவல்கள் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல்.

II. உடன்படிக்கைகளுடன் தொடர்புடைய சட்ட ரீதியான அலுவல்கள்

III. தொடர்புடைய சட்டங்கள், ஒழுங்குவிதிகளுடன் தொடர்புடைய சட்ட ரீதியான அலுவல்கள்

IV. சட்டமூலங்கள், சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட ரீதியான எழுத்தாவணங்களை தயாரிக்கும் அலுவல்கள்

V. பல்வேறு சட்டபூர்வ நிறுவனங்களினால் நடாத்தப்படும் சட்டம் அல்லது நீதிமன்ற நடவடிக்கைகள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்

குறிப்பு :

அடிப்படைத் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களில் விண்ணப்பதாரியினால் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். சேவைக் காலம் ஆரம்பிக்கின்ற மற்றும் நிறைவடைகின்ற திகதி தெளிவாகக் குறிப்பிடப்பட்டிராத சான்றிதழ்கள் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படலாம்.

* சட்டம் சார்ந்த பதவி என்பதலிருந்து, சட்டத்துறையில் பட்டம் அல்லது உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல் ஆட்சேர்ப்புக்கான அடிப்படைத் தகைமையைக் கொண்டுள்ள பதவிகள் எனக் கருதப்படும்.

3.3. **உடற் தகைமைகள் :**

சகல விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் அலுவல்களை மேற்கொள்வதற்கும் போதுமான உடல் மற்றும் உள ரீதியான தகுதியினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3.4. **ஏனைய தகைமைகள்:**

i. விண்ணப்பதாரிகள் நன்னடத்தையுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

ii. அரசாங்க உத்தியோகத்தரான விண்ணப்பதாரிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்றுத் தண்டனைக்கு ஆளாகியிருத்தலாகாது.

iii. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று, அதாவது 30.10.2026 ஆம் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளை சகல வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள் :**

i. இந்தப் பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதிய உரித்துடையதாகும். தங்களுக்குரிய ஓய்வூதிய முறை தொடர்பாக அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கை அடிப்படையிலான தீர்மானத்திற்கு தாங்கள் உட்படுதல் வேண்டும். தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புச் செலுத்தல் வேண்டுமென்பதோடு அரசாங்கத்தினால் அவ்வப்போது தீர்மானிக்கப்படும் விதத்தில் தாங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையைச் செலுத்துதல் வேண்டும்.

ii. இந்த நியமனம் மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும். பதவிக்கு ஆட்சேர்த்துக்கொள்ளப்பட்டு மூன்று (03) வருட காலத்தினுள் ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் முதலாவது வினைத் திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

iii. 2020.10.16 ஆம் திகதிய 18/2020 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கமைய, உரிய அடுத்த அரச கரும மொழி / மொழிகளில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

iv. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஒழுங்குவிதிகளுக்கும், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளுக்கும், கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்று தர சேவைகள் வகுதியின் தரம் III சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதற்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்படவுள்ளதுமான திருத்தங்களில் உள்ளடக்கப்படும் ஏற்பாடுகளுக்கும் இந்த நியமனம் உட்படுதல் வேண்டும்.

v. கோரப்படுகின்ற மொழிமூலத்தை பின்னர் மாற்றிக்கொள்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாதென்பதோடு, தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட மொழிமூலமே தாங்கள் நியமனத்தைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்ளும் மொழிமூலமாகும்.

5. **சம்பள அளவுத் திட்டம் :**

இப்பதவிக்கு 2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய ரூ.82,150.00 - 10 × 2,400 - 8 × 2,940 - 17 × 3,900 - 195,970.00 (SL1-2025) (மாதாந்த) சம்பள அளவுத் திட்டம் உரித்துடையதாகும்.

6. **வயதெல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

7. **தகைமைகளை மதிப்பீடு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை :**

அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், அதன்போது பின்வரும் புள்ளி வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்:

| *இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சளவு புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள் :** | | **25** |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது இலங்கை பாராளுமன்ற சட்டமொன்றினால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வழங்கப்படும் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட சட்டம் பற்றிய முதுமாணிப் பட்டம். | 25 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட சட்டம் தொடர்பான பட்டப்பின் டிப்ளோமா அல்லது இலங்கை சட்டக் கல்லூரியின் உயர் சட்டக் கல்வி நிறுவகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சட்டப் பின் டிப்ளோமா. | 20 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு அல்லது அரசாங்க பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது இலங்கை பாராளுமன்ற சட்டமொன்றினால் நிறுவப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து வழங்கப்படும் அல்லது 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25A பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட | | |
| | ✓ முதலாம் வகுப்பு சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 15 | |
| | ✓ இரண்டாம் வகுப்பு மேல்நிலை சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 10 | |
| | ✓ வகுப்பு சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 07 | |
| | ✓ சாதாரண சித்தியுடனான சட்டமாணிப் பட்டம் | 05 | |

<table>
<tr><th>இல.</th><th>விடயம்</th><th>புள்ளிகள்</th><th>உச்சளவு புள்ளிகள்</th></tr>
<tr><td></td><td>(ஈ) சட்டக் கல்லூரியின் இறுதியாண்டில் முதலாம் வகுப்பு சித்தி<br>சட்டக் கல்லூரியின் இறுதியாண்டில் இரண்டாம் வகுப்பு சித்தி<br>குறிப்பு :<br>சட்டக் கல்லூரியின் இறுதிப் பரீட்சையை சிறப்பு சித்தியுடன் சித்தியடைந்திருந்தால் மாத்திரம் மேலே குறிப்பிடப்பட்ட 05 புள்ளிகள் வழங்கப்படும்.<br>(உ) அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சட்டத் துறையுடன் தொடர்புடைய 06 மாதங்களுக்கு குறையாத டிப்ளோமா பாடநெறி.<br>(ஊ) அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப் படும் சட்டத் துறையுடன் தொடர்புடைய 03 மாதங்களுக்கு குறையாத டிப்ளோமா பாடநெறி.<br>(உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.)</td><td>10<br>05<br><br><br>03<br>02</td><td></td></tr>
<tr><td>02</td><td>மேலதிக அனுபவம் :<br>வழக்குகளுடன் தொடர்புடைய ஆவணங்களை தயாரித்தல் மற்றும் திறந்த நீதிமன்றில் விடயங்களை முன்வைத்தல்
<table>
<tr><th></th><th>வழக்குத் தாக்கல் (ஒரு வழக்கிற்கு)</th><th>நீதிமன்றில் தோற்றி விடயங்களை முன்வைத்தலுக்கான புள்ளிகள் (ஒரு வழக்கிற்கு)</th></tr>
<tr><td>உயர் நீதிமன்றம்</td><td>2</td><td>5</td></tr>
<tr><td>மேன்முறையீட்டு நீதிமன்றம்</td><td>2</td><td>4</td></tr>
<tr><td>மேல் நீதிமன்றம்</td><td>2</td><td>3</td></tr>
<tr><td>மாவட்ட நீதிமன்றம்</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>நியாய சபைகள்</td><td>2</td><td>3</td></tr>
</table>
குறிப்பு : மேலே குறிப்பிடப்பட்ட தகைமைகளை உறுதிப்படுத்துவதற்காக தொடர்புடைய வழக்குத் தீர்ப்புக்களின் பிரதிகள் அல்லது இறுதியாக வழக்கு விசாரிக்கப்பட்ட திகதியின் வழக்கறிக்கையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை நேர்முகப் பரீட்சைக் குழாமிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.</td><td></td><td>35</td></tr>
<tr><td>03</td><td>மொழித் தேர்ச்சி<br>(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து ஆங்கில மொழியை பிரதான பாடமாக உள்ளடக்கப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டம்.<br>(ஆ) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச அல்லது தேசிய மட்டத்திலான மாதிரி நீதிமன்றப் போட்டிகளில் (Moot court competitions) ஆங்கில மொழியில் காண்பித்துள்ள திறமை.<br>ஒற்றையர் போட்டி<br>i. முதலாமிடம் / சிறப்பான திறமை - 12<br>ii. இரண்டாமிடம் - 10<br>iii. மூன்றாமிடம்/ ஏனைய திறமைகள் - 08</td><td>15<br>12</td><td>15</td></tr>
</table>

| *இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்சளவு புள்ளிகள்* |
|---|---|---|---|
| | குழுப் போட்டி<br>i. முதலாமிடம் / சிறப்பான திறமை - 10<br>ii. இரண்டாமிடம் - 08<br>iii. மூன்றாமிடம்/ ஏனைய திறமைகள் - 06 | | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஆங்கில மொழி டிப்ளோமா அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட SLQF-3 அல்லது அதனிலும் உயர் தர டிப்ளோமா அல்லது அரசாங்கத்தின் பயிற்சி நிறுவகமொன்றிலிருந்து / அரசாங்கத்தின் பயிற்சி நிறுவகமொன்றுடன் இணைந்த நிறுவகமொன்றிலிருந்து குறைந்தது 1500 மணித்தியாலக் கற்கைக் காலத்தைக் கொண்ட பாடநெறியொன்றைக் கற்று பெற்றுக்கொண்ட ஆங்கில மொழி டிப்ளோமா. | 10 | |
| | (ஈ) க.பொ.த. (உயர்தரம்) பரீட்சையில் (உள்நாட்டு அல்லது லண்டன்) ஆங்கில மொழிக்கு குறைந்தது அதி திறமை சித்தியைப் பெற்றிருத்தல் அல்லது IELTS மொத்தப் புள்ளி 6.5 அல்லது அதனிலும் அதிகம், TOEFL-IBT 79 அல்லது அதனிலும் அதிகம், TOEFL-CBT 213 அல்லது அதனிலும் அதிகம் அல்லது TOEFL-PBT 550 அல்லது அதனிலும் அதிகமாக இருத்தல். | 08 | |
| | (உ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக் கொள்ளப்பட்ட உயர் சான்றிதழ் அல்லது வேறு நிறுவனமொன்றிலிருந்து ஆங்கில மொழிக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட SLQF-2 மட்ட சான்றிதழ்.<br>(உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | 05 | |
| 04 | **தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சட்டம் பற்றிய அறிவு** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பட்டத்தில் தகவல் தொழில்நுட்பம் அல்லது கணினி விஞ்ஞானத்தை பிரதான பாடமாக கற்றிருத்தல். | 10 | |
| | (ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து அல்லது இலங்கை சட்டக் கல்லூரி யிலிருந்து அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய தொழில நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான டிப்ளோமா. | 08 | |
| | (இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்பம் தொடர்பான டிப்ளோமா அல்லது ஏனைய நிறுவகமொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட கணினி விஞ்ஞானம் அல்லது தகவல் தொழில்நுட்ப சட்டம் தொடர்பான NVQ-5 அல்லது அதனிலும் உயர் மட்டத்திலான டிப்ளோமா. | 05 | |
| | (ஈ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது இலங்கை சட்டக் கல்லூரியில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில் நிறுவகமொன்றில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சட்டத் துறையில் பாடநெறியைப் பயின்று / பயிற்சித் திட்டங்களில் பங்கேற்று பெற்றுக் கொண்டுள்ள சான்றிதழ்கள் (ஒரு சான்றிதழுக்கு 02 புள்ளிகள் வீதம் அதிக பட்சமாக இரண்டு சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும்.)<br>(உயர் தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்.) | 04 | |

| இல. | விடயம் | புள்ளிகள் | உச்சளவு புள்ளிகள் |
|---|---|---|---|
| 05 | **நேர்முகப் பரீட்சையின்போது காண்பிக்கும் திறமை**<br>பதவிக்குரிய அலுவல்களை நிறைவேற்றுவதற்கு துணைபுரியும் விண்ணப்ப தாரியின் | | **15** |
| | ✓ சக்திகள் (Strength Questions) | 02 | |
| | ✓ சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானங்களை எடுக்கும் திறன் (Situational Questions) மற்றும் | 03 | |
| | ✓ திறமை (Competency Questions) | 10 | |
| | மதிப்பீட்டுக்கு உட்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட கேள்விகளுக்கு வழங்கும் பதில்களுக்கமைய புள்ளிகள் வழங்கப்படும். | | |
| | **மொத்தம்** | | **100** |

8. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்:**

சகல விதத்திலும் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே தகைமைகளை மதிப்பீட்டுக்குட்படுத்துவதற்கான கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். நேர்முகப் பரீட்சையின்போது அனைத்து சான்றிதழ்களினதும் மூலப் பிரதிகள் மற்றும் விண்ணப்பதாரியினால் உரிய பிரகாரம் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின்போது தமது ஆளடையாளத்தை காண்பிப்பதற்காக பின்வரும் ஆளடையாளப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

i. ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தேசிய ஆளடையாள அட்டை
ii. செல்லபடியாகும் கடவுச்சீட்டு.

9. **விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை:**

i. விண்ணப்பங்களை 2026.10.30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம், கமநல அபிவிருத்தித் திணைக்களம், இலக்கம் 42, சேர் மார்கஸ் பெர்னாந்து மாவத்தை, கொழும்பு 07" எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரடியாக கையளித்தல் வேண்டும். அன்றைய திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

ii. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் சட்ட அலுவலர் பதவிக்கு (திறந்த அடிப்படை) ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2026” எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

iii. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவையுடைய தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 03. வரையும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 04 முதல் 06 வரையும், மூன்றாம் பக்கத்தில் இலக்கம் 07 முதல் 10 வரையும் இருக்கக்கூடிய விதத்தில் தயாரித்து தமது கையெழுத்துக்களில் பூர்த்திசெய்தல் வேண்டும்.

iv. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பத்தை அரசாங்கப் பாடசாலையொன்றின் அதிபர் / சமாதான நீதவான் / சத்தியப் பிரமாண ஆணையாளர் / சட்டத்தரணி / பிரசித்திபெற்ற நொத்தாரிஸ் / முப்படையைச் சேர்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் அல்லது ரூ. 82,150.00 அல்லது அதனிலும் அதிக மாதாந்த இணைந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையைச் சேர்ந்த நிரந்தரப் பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் ஆகியோரில் ஒருவர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

v. தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் புணிபுரியும் அலுவலர்கள் தமது விண்ணப்பங்களை தாம் பணியாற்றும் திணைக்களத்தின் திணைக்களத் தலைவர் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

vi. இத்துடன் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் அறிவித்தலின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற்போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப்பேற்கப்படமாட்டாது.

vii. விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதனை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதனால் ஏற்படும் எந்தவொரு பாதக நிலைமையையும் விண்ணப்பதாரி ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

10. **பொய்யான தகவல்களை வழங்குதல்:**

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் பொய்யானவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பு செய்வதற்கு முன்னர் தெரியவரின் தங்களது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் தெரியவரின் அதனுடன் தொடர்புடைய நடைமுறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

11. வெற்றிடங்களை நிரப்புதல் அல்லது நிரப்பாதிருக்கும் உரிமை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு உரியதாகும்.

12. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்களில் ஏதேனும் இணக்கமின்மைகள் அல்லது முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில் சிங்கள மொழிப் பிரயோகமே வலுப்பெறல் வேண்டும்.

13. இந்த அறிவித்தலில் குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயம் தொடர்பில் அல்லது ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஏதேனும் சிக்கல் நிலைமை ஏற்பட்டால் அது சம்பந்தமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

டீ. பீ. விக்கிரமசிங்ஹ,
செயலாளர்,
கமத்தொழில், கால்நடை வளங்கள்,
காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு.

80/5, "கொவிஜன மந்திரய"
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்லை,
இலங்கை,
2026.09.18.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் கீழ் நிலவுகின்ற கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் நிறைவேற்று தர உத்தியோகத்தர் பதவியின் தரம் III சட்ட அலுவலர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்துக்கொள்ளல் - 2026**

(விண்ணப்பிக்கும் மொழிக்குரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்.)

சிங்களம் -2 / தமிழ் -3 / ஆங்கிலம் - 4 ☐

*குறிப்பு* :- விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு முடியாது.

☐
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

1.0

1.1 முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி) : ..............................................................................................

(சிங்களத்தில் /தமிழில்) ..............................................................................................

1.2 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............................................................................................
..............................................................................................

1.3 முதலெழுத்துக்களுடன் பெயர் ( திரு./திருமதி/செல்வி) : ..............................................................................................

(சிங்களத்தில் / தமிழில் ) ..............................................................................................

உ-ம்: எம்.ஜீ.பி.எஸ்.கே.குணவர்தன

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............................................................................................

உ-ம்: GUNAWARDHANA, M.G.B.S.K ..............................................................................................

2.0

2.1 நிரந்தர முகவரி :..................................................................................................

(சிங்களத்தில் /தமிழில் ) ..................................................................................................

2.2 நிரந்தர முகவரி :..................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) ..................................................................................................

2.3 நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பதற்கான கடிதத்தை அனுப்ப வேண்டிய முகவரி :........................................................
..................................................................................................................................................

3.0

3.1 பாலினம் : ஆண் - 0
பெண் - 1 [ ] (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.2 விவாக நிலை : விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் 2 [ ] (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.4 2026.10.30 ஆம் திகதியன்று வயது :

வருடங்கள் : [ | ] மாதங்கள் : [ | ] நாட்கள்: [ | ]

4.0 தேசிய ஆளடையாள அட்டை இல.: [ | | | | | | | | | | | ]

5.0 தொலைபேசி இல. : நிலையான [ | | | | | | | | | ]

கையடக்க [ | | | | | | | | | ]

6.0

6.1 நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கு விண்ணப்பங்களைக் கோருகின்ற அறிவித்தலுக்கமைய பெற்றுக் கொண்டுள்ள தகைமைகள் பற்றிய விபரம் :

| தகைமைகளைப் பெற்றுக்கொண்ட நிறுவனம் | பெற்றுக்கொண்ட திகதி |
|---|---|
| ........................................................................ | ............................................. |
| ........................................................................ | ............................................. |

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த திகதி : …………………………..

*அடிப்படைத்தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள்/ ஆவணங்களின் பிரதிகளை விண்ணப்பதாரியே உண்மையானதென உறுதிப்படுத்தி விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைக் கோருகின்ற அறிவித்தலின் இலக்கம் 07 இன் கீழான ஒவ்வொரு தகைமைகளையும் பெற்றுக் கொள்ளலுடன் தொடர்புடைய விபரம் :

6.2 **மேலதிக கல்வித் தகைமைகள்:**

……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………..

6.3 மேலதிக தொழில்சார் அனுபவம்: ..............................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

6.4 தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பம் தொடர்பான சட்டம் பற்றிய அறிவு: ......................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

6.5 மொழித் தேர்ச்சி :.......................................................................................................................
..........................................................................................................................................
..........................................................................................................................................

* மேலதிக தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான ஆவணங்களை விண்ணப்பத்துடன் அனுப்ப வேண்டியதில்லையென்பதோடு, அந்த ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பிப்பதற்கு தயாராக வைத்திருத்தல் விண்ணப்பதாரியின் பொறுப்பாகும்.

7.0 தாங்கள் எப்போதாவது குற்றமொன்றுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? (உரிய கூட்டினுள் (✓) அடையாளத்தை இடவும்) (ஆமெனில் விபரிக்கவும்)

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

..........................................................................................................................................
..........................................................................................................

8.0 **விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை எனவும், அனைத்துப் பகுதிகளும் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளதெனவும், இதில் என்னால் வெளிப்படுத்தப்பட்ட ஏதேனுமொரு விடயம் பொய்யானது என நிரூபிக்கப்பட்டால், தெரிவு செய்யப்படுவதற்கு முன்னர் அறியக்கிடைத்தால் நான் இப்பதவிக்குப் பொருத்தமற்றவர் எனவும், நியமிக்கப்பட்டதன் பின்னர் அறியக்கிடைத்தால் பணி நீக்கம் செய்வதற்கு ஆளாகுவேன் என்பதையும் நான் அறிவேன் எனவும், அனைத்து சட்ட விதிமுறைகளுக்கும் நான் உட்படுவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

திகதி:......................................  .......................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

9.0 **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கின்ற திரு. / திருமதி / செல்வி ....................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் ………………….. ஆம் திகதி எனது முன்னிலையில் கையொப்பத்தை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி:......................................  ...........................................................
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்

முழுப் பெயர் : ..........................................................................................................................

பதவி : ..........................................................................................................................

முகவரி : ..........................................................................................................................

(பதவி முத்திரையினால் உறுதிப்படுத்தவும்)

10.0 திணைக்களத் தலைவரின் பரிந்துரை: (அரசாங்க சேவையில் பணியாற்றுகின்ற விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமாகும்.)

மேலுள்ள விபரங்களையுடைய திரு./ திருமதி/ செல்வி ........................................................................ என்பவர் இந்த நிறுவனத்தில் பணியாற்றுபவரெனவும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையெனவும், பணி மற்றும் வருகை திருப்திகரமானதெனவும், அவருக்கு எதிராக எந்தவிதமான குற்றச்சாட்டுக்கள் இல்லையெனவும், இந்தப் பதவிக்காக அவர் தெரிவு செய்யப்பட்டால் அவரை இந்த நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் / முடியாதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

...................................... ............................................................
திகதி திணைக்கள / நிறுவன தலைவரின் கையொப்பம்

முழுப் பெயர் :........................................................................................

பதவி : ..........................................................................................................

முகவரி : ....................................................................................................

(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

09-344

---

## அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை வெற்றிடங்கள்

அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் கீழ் குறிப்பிடப்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| பதவிகள் | வெற்றிட எண்ணிக்கை |
|---|---|
| 01. மத்திய முகாமையாளர் ( MM 1-1) | |
| 01.01 பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (மாகாணம்) | 03 |
| 02. கனிஷ்ட முகாமைத்துவ பதவி (JM 1-1) | |
| 02.01 விஞ்ஞான உத்தியோகத்தர் | 06 |
| 03. அமுல்படுத்தும் உத்தியோகத்தர் / செயற்படுத்தல்/ பரவலாக்கள் உத்தியோகத்தர் பதவி (MA 5-2) | |
| 03.01 உதவி விஞ்ஞான உத்தியோகத்தர் | 02 |

01. பதவிப் பெயர் - பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் (மாகாணம்)

சேவைப் பிரிவு - மத்திய முகாமையாளர் - (MM 1-1)

வெற்றிட எண்ணிக்கை - 03

01.01 தகைமைகள்

01.1.1 வெளி விண்ணப்பதாரிகள்

சமூக விஞ்ஞானம் / மனோவியல் / குற்றவியல் விஞ்ஞானம் / சமூகப் பணிகள் அகிய விடயத்துறைகளைக் கொண்ட பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறப்பட்ட பட்டத்தினை பெற்றுக் கொண்டதன் பின்னர் பதவியிற்குரியதாக விடயத்துறையில் குறைந்தபட்சம் 01 வருடகால அனுபவத்தினைப் பெற்றிருத்தல்.

01.1.2 **உள்ளக விண்ணப்பதாரர்கள்** (கீழ் 1 அல்லது 2)

01. மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

02. அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் கனிஷ்ட முகாமைத்துவம் (JM) சேவைப் பிரிவின் உரிய துறையின் பதவியில் குறைந்தபட்சம் 05 வருடகால திருப்பதிகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

01.02 **வயது** :-

22 வயதினைவிடக் குறையாத மற்றும் 45 வயதினைவிட மேற்படாதிருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர் களுக்காக உயர்ந்தபட்ச வயதெல்லை அமுலில் இருக்காது.

01.3. **சம்பள குறியீட்டு இலக்கம்** - MM 1-1

01.4. **மாதாந்த சம்பள அளவு** - 2025.03.25 ஆம் அ.சே.சு. 01/2025 MM 1-1-2025

ரூபா ( MM 1-1 ரூபா (91,690.00 - 10 x 2,480 - 15 x 3,450 - ரூபா 168,240.00)

(சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகின்றது)

02. **பதவிப் பெயர்** - விஞ்ஞான உத்தியோகத்தர்

சேவைப் பிரிவு - கனிஷ்ட முகாமைத்துவம் - (JM 1-1)

வெற்றிட எண்ணிக்கை - 06

02.01 **தகைமைகள்.**

02.1.1 **வெளி விண்ணப்பதாரர்கள்**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, இரசாயண விஞ்ஞானம் தொடர்பான சிறப்பு பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

02.1.2. உள்ளக விண்ணப்பாதாரர்களுக்கான தகைமைகள் (கீழ் 1 அல்லது 2 அல்லது 3)

1. மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. அமுல்படுத்தல் / செயற்படுத்தல் / பரவலாக்கள் சேவைப் பிரிவில் (MA 5-2) தொடர்புடைய துறையில் பதவியில் (உதவி விஞ்ஞான உத்தியோகத்தர்) ஆக குறைந்தபடசம் 05 வருடகால சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.
3. முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவில் (MA 2-1) II தரத்தில் உரிய துறையின் பதவியில் (இரசாயண ஆய்வுகூட தொழில்நுடபத்திறன்) குறைந்தபட்சம் 05 வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

02.2. **வயது**

22 வயதினைவிடக் குறையாது மற்றும் 45 வயதினைவிட மேற்படாதிருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர் களுக்காக உயாந்தபட்ச வயதெல்லை அமுலில் இருக்காது.

02.3. **சம்பள குறியீட்டு இலக்கம்** - JM 1-1

02.4. **மாதாந்த சம்பள அளவு** - 2025.03.25 ஆம் அ.சே.சு. 01/2025 JM 1-1-2025

ரூபா (72,650.00 - 10 x 1,360 - 18 x 2,040 - ரூபா 122,970.00)

(சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் வரப்பிரசாதங்கள் உரித்தாகின்றது)

03.1. **பதவிப் பணிப்பாளர்** - உதவி விஞ்ஞான உத்தியோகத்தர்

சேவைப் பிரிவு - அமுல்படுத்தல் / செயற்படுத்தல் / பரவலாக்கள் உத்தியோகத்தர் (JM 5-2)

வெற்றிட எண்ணிக்கை - 02

03.1.1. **தகைமைகள்**

03.1.1.1. **வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகள்**

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட, இரசாயண விஞ்ஞானம் அல்லது பதவியிற்கு உரியதான விடயத்துறையில் வேறு பட்டத்தினைப் பெற்றிருத்தல்.

03.1.1.2. உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக தகைமைகள் (கீழ் 01 அல்லது 02)

1. மேற்கூறப்பட்ட வெளி விண்ணப்பதாரர்களுக்கான தகமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
2. அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைப் பிரிவில் (MA 2-1) (இரசாயண தொழில்நுட்ப திறன் (MA 2-1) (இரசாயணவியல் தொழில்நுட்பத் திறன்) உரிய துறையின் பதவியில் குறைந்தபட்சம் (08) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தினைப் பூர்த்தி செய்திருத்தல்.

03.1.2. **வயது**

22 வயதினைவிடக் குறையாது மற்றும் 45 வயதினைவிட மேற்படாதிருக்க வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்காக உயாந்தபட்ச வயதெல்லை அமுலில் இருக்காது.

03.1.3. **சம்பள குறியீட்டு இலக்கம்** - MA 5-2

03.1.4. **மாதாந்த சம்பள அளவு** - 2025.03.25 ஆம் அ.சே.சு. 01/2025 MA 5-2 ரூபா (62,310.00 - 10 x 1,360 - 15 x 1,670 - 5 x 2,040 - ரூபா 111,160.00) (சம்பளத்திற்கு மேலதிகமாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவு மற்றும் வராப்பிரசாதங்கள் உரித்தாகின்றது)

**இப் பதவிற்குரிய பொதுவான நிபந்தனைகள் :**

சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டியதுடன், பதவிக்குரியதாக பொறுப்பளிக்கப்படும் பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்காகவும் நாட்டின் எந்தப் பாகத்திலும் சேவையாற்றுவதற்கு பொருத்தமான உடல், உள தகைமை கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

விண்ணப்படிவத்தினை ஏற்றுக் கொள்ளும் இறுதித் தினமன்று அனைத்து முறைகளிலும் தகைமைகள் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**விண்ணப்படிவத்தினை சமர்பிக்கும் மொழி.**

சகல விண்ணப்பதாரர்களும் ஆங்கில மொழிமூலம் மாத்திரம் தமது விண்ணப்படிவங்களை பூர்த்தி செய்ய வேண்டும். அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.nddcb.gov.lk இற்கு பிரவேசித்து, “தொழில்” (https://www.nddcb.gov.lk/sinhala/careers.php) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கு அமைய விண்ணப்படிவங்களை பூர்த்தி செய்து Submit Application மேற்கொண்டதன் பின்னர் அதன் பிரதியினை பதிவிறக்கம் செய்து, அவ் வன்பொருள் பிரதியினை நிதி செலுத்திய பற்றுச்சீட்டின் முதல் பிரதியினை இணைத்து தங்களது விண்ணப்படிவத்துடன் பதவிக்குரிய சான்றிதழ் பத்திரங்களின் போட்டோ பிரதியுடன் பதிவுத் தபால் ஊடாக அனுப்ப வேண்டும்.

**ஆட்சேர்ப்பு ஒழுங்குமுறைகள்**

ஆட்சேர்ப்பு பொறுப்பாளரினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறு எழுத்து மூல பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**ஆட்சோப்பின் தன்மை**

நிரந்தரமானது, ஊழிய சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் பொறுப்பு நிதியத்திற்காக உரிமை கொண்டதாகும்.

**விண்ணப்பக் கட்டணம்**

வெளி விண்ணப்பதாரர்கள் மாத்திரம் விண்ணப்ப கட்டணமாக ரூபா 500.00 நிதியினை எந்தவொரு இலங்கை வங்கிக் கிளை “அபாயகர அவுடதங்கள் தேசிய கட்டுப்பாட்டு சபை” என்ற பெயரில் இலங்கை வங்கியின் கோபரேட் கிளையில் (Corporate Branch) இலக்கம் 00001643 இன் கீழ் பேணப்பட்டுள்ள கணக்கில் வைப்பிலிட்டு, நிதி வைப்பு பத்திரத்தின்

போட்டோ பிரதியினை வைத்துக் கொண்டு, அதன் முதல் பிரதி (Deposit slip) விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். விண்ணப்பக் கட்டணம் மீளளிப்பு செய்யபட்ட மாட்டாது.

பதிவிறக்கம் செய்த விண்ணப்பப்படிவத்தினை (கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினை தெளிவாக குறிப்பிட்டு) உரிய சான்றிதழ்களின் பிரதியுடன் 2026.10.16 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபாலில் "தலைவர், அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை, இலக்கம் 383, கோட்டே வீதி, ராஜகிரிய" என்ற முகவரியிற்கு கிடைக்கச் செய்யுமாறு அனுப்பவும். அரசாங்க திணைக்களம், கூட்டுத்தாபனம் அல்லது நிலையியற் சபைகளில் சேவையாற்றும் ஊழியர்கள் தமது விண்ணப்படிவத்தினை நிறுவன / திணைக்கள பொறுப்பாளர் ஊடாக அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்படிவத்தினை பொறுப்பேற்கும் இறுதித் தினமன்று உரிய தகைமைகளை பூர்த்தி செய்யாதுள்ள விண்ணபடிவங்கள் / முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்படிவங்கள் / நிதி வைப்புப் பத்திரத்தின் முதல் பிரதியினை இணைத்து அனுப்பாத விண்ணப்பப்படிவங்கள் / பதிவிறக்கம் (Download) செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களைத் தவிர அனுப்பப்பட்ட ஏனைய விண்ணப்பப்படிவங்கள் மற்றும் விண்ணப்பபப்படிவங்கள் பொறுப்பேற்கும்; இறுதித் திகதியிற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

ஆட்சேர்ப்புக்கள் தொடர்பில் சபையினால் எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

தலைவர்
அபாயகர அவுடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை.

383, கோட்டே வீதி,
ராஜகிரிய.
வெளியீட்டுத் திகதி : 2026.09.25.

09-347

---

## திருத்தம்

## அரசாங்க சேவை ஆணைக்குழு

## வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு

### அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் சட்ட அதிகாரி (நிறைவேற்றுத் தர சேவைப் பிரிவு III ஆம் தரம்) பதவிக்காகத் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தின் நிறைவேற்றுத் தர சேவைப் பிரிவைச் சேர்ந்த III ஆம் தரத்துக்கான சட்ட அதிகாரி பதவிக்காக திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வது தொடர்பாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 2477 மற்றும் 2026.02.20 ஆந் திகதியுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 8 (i) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரும் திகதியை 2026.10.09 ஆந் திகதி வரை நீடிப்பதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழு ஆணையிட்டுள்ளது என்பதை அதன் கட்டளையின் பிரகாரம் அறியத்தருகின்றேன்.

மேற்கூறப்பட்ட திருத்தத்தினூடாக இப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குத் தேவையான அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்ய வேண்டிய திகதியான 2026.03.20 எனும் திகதியில் மாற்றம் இல்லை என்பதையும், ஏற்கனவே விண்ணப்பித்த விண்ணப்பதாரிகள் மீண்டும விண்ணப்பிக்கத் தேவையில்லை என்பதையும் மேலும் அறியத்தருகின்றேன்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் உத்தரவின் பிரகாரம்,

கே. ஏ. விமலேந்திரராஜா,
செயலாளர்,
வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும்
கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு.

வர்த்தக, வணிக, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு.
இல. 492,
ஆர். ஏ. டி மெல் மாவத்தை,
கொழும்பு 03.

09-348

## பொது சேவை ஆணைக்குழு

## புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

## கலாசார அலுவல்கள் திணைக்களம்

## சிங்கள அகராதி அலுவலகத்தின் பிரதம ஆசிரியர் மற்றும் சிங்கள கலைக்களஞ்சிய அலுவலகத்தின் பிரதம ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன (ஒப்பந்த அடிப்படையில்)

01. கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் நிலவும் கீழ்வரும் வெற்றிடப் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

- சிங்கள அகராதி அலுவலகத்தின் பிரதம ஆசிரியர்
- சிங்கள கலைக்களஞ்சிய அலுவலகத்தின் பிரதம ஆசிரியர்

02. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2026.10.16 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு, "கலாசார அலுவல்கள் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

03. இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A 4 (8.27x11.69) அளவிலான தாளில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட வேண்டும்.

04. இப்பதவிகளுக்கான விண்ணப்பங்களை அனுப்பும் போது, விண்ணப்பிக்கும் பதவி விண்ணப்பம் அனுப்பபபடும் கடித உறையின் மேல் இடது பக்க மூலையில் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.

05. விண்ணப்பப்படிவத்தை நிரப்பும் போது கல்வி மற்றும் ஏனைய தகுதிகள் தொடர்பான விபரங்களை சரியாக உள்ளிட வேண்டும்.

06. நியமனம் மற்றும் சேவை நிபந்தனைகள் :

* ஊதியம் மாதாந்தம் ரூபா 150,000.00 கொடுப்பனவு வழங்கப்படும். (போக்குவரத்து மற்றும் எரிபொருள் கொடுப்பனவாக ரூபா 50,000.00 இதில் உள்ளடங்கும்.)
* இப்பதவி ஒப்பந்த அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட பதவியாகும். நிரந்தர நியமனம் பெறுவதற்கோ அல்லது நிரந்தர உத்தியோகத்தர்களுக்குரிய சலுகைகளுக்கோ உரிமை இல்லை. இப்பதவிக்கான ஆட்சேர்ப்பு ஒரு வருட ஒப்பந்தக் காலத்திற்கு மட்டுமே.

07. **தகைமைகள்** :

7.1 கல்வித் தகைமைகள்:

01. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கலாநிதிப் பட்டம் பெற்றிருத்தல்.

7.2 தொழில்சார் தகைமைகள் : பொருந்தாது.

7.3 அனுபவம்:

01. (i) பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிரேஷ்ட பேராசிரியர், பேராசிரியர் அல்லது இணைப் பேராசிரியராக பதவியில் குறைந்தபட்சம் 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

(ii) அகராதி / கலைக்களஞ்சிய அலுவலகமொன்றில் ஆசிரியர் பதவியில் குறைந்தபட்சம் 05 வருட தொடர்ச்சியான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

02. ஆங்கில மொழி மற்றும் பாலி, சமஸ்கிருத மொழிகள் தொடர்பில் நிபுணத்துவ அறிவைப் பெற்றிருத்தல். (கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது வாய் மொழியாக கருத்துக்களை வெளிப்படுத்தும் திறனும் எழுத்தறிவும் பரிசோதிக்கப்படும்.)

7.4 உடற் தகைமைகள்:

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதுமான உடல் மற்றும் மனத் தகுதியைக் கொண்டிருக்க வேண்டும்.

7.5 ஏனைய தகைமைகள் :-

1. அனைத்து விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர்கள் சிறந்த நற்பண்புடையவர்களாக இருக்க வேண்டும்.
3. பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவதற்காக, விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியன்று 7.1 முதல் 08 வரை உள்ள அனைத்து தகுதிகளையும் முழுமையாக பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

08. **வயது** :

60 வயதுக்கு குறையாமலும் 72 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

09. **ஆட்சேர்ப்பு முறை** :

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது தகுதிகளும் பரிசோதிக்கப்படும்.

| *பிரதான துறை* | *அதிகபட்ச மதிப்பெண்கள்* | *தேர்வுக்காக கருதப்படும் குறைந்தபட்ச மதிப்பெண்கள்* |
|---|---|---|
| மேலதிக கல்வித் தகைமைகள் | 10 | பொருந்தாது |
| அனுபவம் | 30 | |
| அகராதி/கலைக்களஞ்சிய அலுவலகத்தில் சேவைக் காலம் | 10 | |
| மேலதிக மொழி அறிவு | 15 | |
| அச்சிடும் கலை தொடர்பான அறிவு | 15 | |
| ஆசிரியராக வெளியிடப்பட்ட கல்விசார் நூல்கள் | 15 | |
| நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தப்படும் திறமை | 05 | |
| மொத்தம் | 100 | |

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பேரில்,

செயலாளர்,
புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிங்கள அகராதி அலுவலகத்தின் பிரதம ஆசிரியர் பதவி மற்றும் சிங்கள கலைக் களஞ்சிய அலுவலகத்தின் பிரதம ஆசிரியர் பதவிகளுக்கான விண்ணப்பம்**
**(ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு)**

01. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர்: ........................................................................................................
........................................................................................................
(ஆ) முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் : ........................................................................................................
........................................................................................................

02. முகவரி:........................................................................................................
........................................................................................................

03. தொலைபேசி இலக்கம் : ....................................................................

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்: ........................................................................................................

05. பிறந்த திகதி : ........................................................................................................

06. தற்போது பதவியொன்றை வகிப்பவராயின் :
I. தற்போது வகிக்கும் பதவி : ........................................................................................................
II. சேவை நிலையம் : ........................................................................................................
III. சேவைக்காலம் : ........................................................................................................

07. கல்வித் தகைமைகள் :
i. கலாநிதிப் பட்டம் பெற்ற கல்வித் துறை :........................................................................................
ii. பல்கலைக்கழகம் :........................................................................................
iii. பட்டச் சான்றிதழின் செல்லுபடியாகும் திகதி :........................................................................................
iv. கலாநிதிப் பட்டம் பெற்ற மொழிமூலம் :........................................................................................

08. சேவை அனுபவம் :

| *பதவி* | *பல்கலைக்கழகம்* | *சேவைக்காலம்* |
|---|---|---|
| I. சிரேஷ்ட பேராசிரியர் | | |
| II. பேராசிரியர் | | |
| III. இணைப் பேராசிரியர் | | |

09. கலாநிதிப் பட்டம் பெற்ற கல்வித் துறைக்கு தொடர்பான வெளியீடுகளின் விபரங்கள்
I. வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் : ....................................................................
II. வெளியிடப்பட்ட நூல்கள் / படைப்புகள் : ....................................................................
III. வெளியிடப்பட்ட ஆய்வுக் கட்டுரைகள் : ....................................................................
(இவ்விட வசதி போதுமானதாக இல்லாவிட்டால் இணைப்பாக சமர்ப்பிக்கவும்.)

10. மேலே 09 ஆம் இலக்கத்தில் குறிப்பிடப்பட்ட கல்வித்துறைக்கு வெளியே வெளியிடப்பட்ட வெளியீடுகளின் விபரங்கள் :
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................
........................................................................................................

(இவ்விடவசதி போதுமானதாக இல்லாவிட்டால் இணைப்பாக சமர்ப்பிக்கவும்)

11. ஆங்கில மொழி மற்றும் பாலி, சமஸ்கிருத மொழிகள் தொடர்பான அறிவு :

.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................
.....................................................................................................................................................

(சமர்ப்பிக்கக்கூடிய சான்றிதழ்கள் அல்லது ஆவணங்களை இணைக்க வேண்டும்.)

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ......................................................................... (விண்ணப்பதாரியின் பெயர்) ஆகிய நான், மேலே வழங்கிய தகவல்கள் அனைத்தும் சரியானவை என இதன் மூலம் சான்றளிக்கிறேன். நான் வழங்கிய மேற்கண்ட தகவல்களில் ஏதேனும் ஒன்று பொய்யானது எனக் கண்டறியப்பட்டால் எனக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதை அறிந்திருக்கின்றேன்.

திகதி:..................... ..................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

09-341

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**அரசாங்க சேவை ஆணைக்குழு**

**தொழில் அமைச்சு**

**தொழில் திணைக்களம்**

## தொழில் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் III ஆம் தர உதவித் தொழில் ஆணையாளர் (திணைக்களம்சார்) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2026

தொழில் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதியின் III ஆம் தரத்தில் 2024.12.31 ஆம் திகதியில் நிலவும் உதவித் தொழில் ஆணையாளர் (திணைக்களம்சார்) பதவி களுக்கான வெற்றிடங்கள் 09 ஐ மட்டுப்படுத்தப்பட்ட பிரிவின் கீழ் நிரப்புவதற்காக, பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள, இத்திணைக்களத்தில் 2026.10.23 ஆம் திகதியளவில் முனைப்பான சேவையிலுள்ள I ஆம் தர தொழில் அலுவலர்களிடமிருந்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரைக்கிணங்க விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் “Our Services” என்பதன் கீழ் உள்ள “Online Application – Recruitment Exams/E.B. Exams” ஊடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (Online) முறையின் மூலம் மட்டுமே சமர்ப்பிக்க முடியும். இணையவழி விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2026, செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, ஒற்றோபர் மாதம் 23 ஆம் திகதி இரவு 09.00 மணிக்கு முடிவடையும். இப்பரீட்சை 2026, திசெம்பர் மாதத்தில் நடாத்தப்படும் / பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

அலுவலர்கள் விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தமது தனிப்பட்ட கோவையில் சேர்த்துக்கொள்வதற்காக நிறுவனத் தலைவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதுடன், நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படும் சந்தர்ப்பத்தில் நிறுவனத் தலைவரினால் சான்றளிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி ஒன்றையும் சேவை உறுதிப்படுத்தல் கடிதம் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

01. **சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் முறை:**

எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்ப தாரர்களுக்காக மட்டுமே சேவைக்காலத்திற்கான புள்ளிகளை வழங்கும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுவதுடன், எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையில் பெறப்படும் புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய அதிகபட்ச புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

மேலும், ஈடேற்ற எதிர்பார்க்கும் நோக்கங்கள், ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதற்கு அமைவாகப் பிரசுரிக்கப்படும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட் டுள்ளனவா என்பதை பரிசீலித்தலும் உடற் தகுதியைப்

பரிசீலித்தலும், அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நேர்முகப்பரீட்சைச் சபையொன்றினால் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும் சந்தர்ப்பத்தில் பரிசீலிக்கப்படும். அதற்காக புள்ளிகள் எதுவும் வழங்கப்படமாட்டாது.

நியமனம் நடைமுறைக்கு வரும் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும் ஒரு திகதியாக அமையும்.

02. **சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

i. இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய உரித்துடையது. மேலும், நீங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு / தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசாங்கத்தினால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் விதத்தில் நீங்கள் அதற்காக பங்களிப்புப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

ii. இப்பதவிக்கு நியமனம் பெறும் அலுவலர்கள் ஓராண்டு தகுதிகாண் காலத்திற்கு உட்படுவர்.

iii. இலக்கம் 18/2020 மற்றும் 2020.10.16 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையினதும் இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளினதும் ஏற்பாடுகளுக்கு அமைய, குறிப்பிட்ட மற்றைய அரச கரும மொழியில் / அரச கரும மொழிகளில் தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

iv. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள PSC/EST/2/1/33/2/2/2012 ஆம் இலக்க மற்றும் 2013.03.07 ஆம் திகதிய தொழில் திணைக்களத்தின் நிறைவேற்றுச் சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையில் விதிக்கப்பட்டுள்ள நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், அவ்வாட்சேர்ப்பு நடவடிக்கை முறையில் செய்யப்பட்டுள்ள அல்லது இதனகத்துப் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களுக்கும், அரசாங்க சேவையின் நியமனங்களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், அரசாங்கத்தின் நிதிப் பிரமாணங்களுக்கும், திணைக்களம்சார் ஏனைய கட்டளைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

v. நிறைவேற்றுச் சேவை வகுதியின் III ஆம் தர உதவித் தொழில் ஆணையாளர் (திணைக்களம் சார்) பதவிக்கு நியமிக்கப்பட்டு மூன்று (03) வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு அமைய முதலாவது வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

vi. விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்பதுடன், நீங்கள் நியமனம் பெறுவதற்குத் தகுதிபெறும் மொழிமூலமாக, தங்களால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழிமூலமே அமையும்.

03. **சம்பள அளவுத்திட்டம்:**

10/2025 ஆம் இலக்க 2025.03.25 ஆம் திகதிய அரசாங்க நிர்வாகச் சம்பளச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இந்நியமனத்திற்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 82,150.00 - 10 x 2,400 - 8 x 2,940 - 17 x 3,900 - ரூபா 195,970.00 (SL-1-2025) ஆகும். அச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க தங்களுக்குச் சம்பளம் செலுத்தப்படுவது அதன் அட்டவனை III இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறாகும்.

04. **தகைமைகள்:**

4.1. கல்வித் தகைமைகள்:

I ஆம் தர தொழில் அலுவலர்களிலிருந்து ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதால் ஏற்புடையதாகாது.

4.2. **தொழில்சார் தகைமைகள்:**

ஏற்புடையதாகாது.

4.3. **அனுபவம்:**

தொழில் அலுவலர் பதவியில் 10 வருடங்கள் செயல்முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருத்தலும், I ஆம் தர தொழில் அலுவலராக இருத்தலும்.

4.4. **உடற்றகைமை :**

ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை ஆற்றுவதற்கும் போதுமான உடலியல் மற்றும் மனோநிலைப் பொருத்தத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4.5. **ஏனைய தகைமைகள்:**

* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
* விண்ணப்பதாரர்கள் நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.
* ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தொழில் அலுவலர் பதவியில் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல்.
* தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதிக்கு உடனடியாக முந்தைய ஐந்து (05) வருட காலப்பகுதியில் திருப்திகரமான மட்டத்திலான அல்லது அதற்கு மேற்பட்ட செயலாற்றுகையைப் பெற்றிருத்தல்.

* தகைமைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய திகதிக்கு உடனடியாக முந்தைய ஐந்து (05) வருட காலப்பகுதியில் அனைத்துச் சம்பள ஏற்றங்களையும் பெற்றிருத்தல்.

* குறிப்பிட்ட வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

* அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 மற்றும் அதன் திருத்தங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனை எதுவும் பெறாதிருத்தல் வேண்டும்.

* விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று, ஆட்சேர்ப்பு நடைமுறையில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்துத் தகைமைகளையும் முழுமையாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

4.6. **வயதெல்லை:**

ஏற்புடையதாகாது.

05. **எழுத்துப் பரீட்சை:**

5.1. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப்பரீட்சை நடாத்தப்படும்.

5.2. பரீட்சை மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.3. எழுத்துப் பரீட்சை பின்வரும் வினாத்தாள்களைக் கொண்டிருக்கும்.

| | *வினாத்தாள்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்திப் புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | தொழில் சட்டங்கள் | 03 மணித்தியாலம் | 100 | 40% |
| 02 | பொது அறிவு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 03 | முகாமைத்துவ உளச்சார்பு | 02 மணித்தியாலம் | 100 | 40% |

5.4. **பரீட்சைக்குரிய பாடத்திட்டம்**

| | *வினாத்தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | தொழில் சட்டங்கள் | இது பின்வரும் சட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும்.<br>• 1941 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்<br>• 1950 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, கைத்தொழில் பிணக்குகள் சட்டம்<br>• 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்<br>• 1971 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, வேலையாட்களின் தொழிலை முடிவுறுத்தல் (சிறப்பேற்பாடுகள்) சட்டம்<br>• 1935 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, தொழிற்சங்கக் கட்டளைச் சட்டம்<br>• 1942 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்<br>• 1956 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, பெண்களையும், இளம் ஆட்களையும் மற்றும் பிள்ளைகளையும் தொழிலுக்கமர்த்துதல் சட்டம்<br>• 1954 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, கடைகள், அலுவலக ஊழியர்கள் சட்டம்<br>• 1939 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, மகப்பேற்று நன்மைகள் கட்டளைச் சட்டம்<br>• 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகச் சட்டம்<br>• 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டம்<br>• 1980 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டம் |

| | *வினாத்தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 02 | பொது அறிவு | சொற்கள், எண்கள் மற்றும் உருவமைப்பு ரீதியிலான சூழமைவில் முன்வைக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பில் விண்ணப்பதாரரின் முடிவுகளையும் துலங்கல்களையும் பரிசீலிப்பதினூடாக விண்ணப்பதாரரின் புரிந்துகொள்ளும் ஆற்றலையும் நுண்ணறிவையும் அளவிடுவது இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |
| 03 | முகாமைத்துவ உளச்சார்பு | பிரச்சினைகளையும் அவற்றுக்கான காரணங்களையும் இனங்காணுதல், தீர்மானங்களை எடுத்தல், ஆளிடைத் தொடர்புகளைப் பேணுதல், தொடர்பாடல் திறமை, சுய கட்டுப்பாடு, கொள்கைகள் மற்றும் மூலோபாயங்களைத் தயாரித்தல் போன்ற ஓர் விண்ணப்பதாரரிடமுள்ள மிகச்சிறந்த முகாமைத்துவத் திறன்களை அவருக்கு முன்வைக்கப்படும் நிகழ்வுகள் மற்றும் சந்தர்ப்பங்களின் அடிப்படையில் நிர்ணயித்தல் இதனால் எதிர்பார்க்கப்படுகின்றது. |

06. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை :**

6.1. நேர்முகப்பரீட்சைச் சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும்.

6.2. எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக்குத் தகுதி பெறுவர்.

6.3. எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையிலும் பெறப்பட்ட புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு அமைய அதிகபட்ச புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படுவர்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்பு* | *உச்சப் புள்ளிகள்* | *தெரிவு செய்வதற்காக பரிசீலிக்கப்படும் குறைந்தபட்சப் புள்ளி அளவு* |
|---|---|---|
| மேலதிக அனுபவம்<br>மேலே உப இலக்கம் 4.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைக்கு மேலதிகமாகவுள்ள செயல்முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்திற்காக புள்ளிகள் வழங்கப்படும். அரசாங்க சேவை ஆணைக்குழுச் சுற்றறிக்கை இலக்கம் 01/2019 மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய, மேலதிக சேவைக்காலத்திற்காக புள்ளிகளை வழங்கும் போது அதிகபட்ச செயல்முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக்காலத்தைக் கொண்டுள்ள அலுவலருக்கு முழுப் புள்ளிகளும் வழங்கப்படுவதுடன், ஏனைய அலுவலர்களுக்கு விகிதாசார அடிப்படையில் மேலதிக சேவைக்காலத்திற்கான புள்ளிகள் வழங்கப்படும். (06 மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட சேவைக்காலத்திற்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்) | 100 | ஏற்புடையதாகாது |
| மொத்தம் | 100 | |

07. **பொது நேர்முகப்பரீட்சை :**

ஈடேற்றிக்கொள்ள எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் - ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதற்கு அமைவாகப் பிரசுரிக்கப்படும் விண்ணப்பம் கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதை பரிசீலித்தலும் உடற்தகுதியைப் பரிசீலித்தலும், கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை நடாத்தப்படும் சந்தர்ப்பத்திலேயே மேற்கொள்ளப்படும்.

**கவனத்திற் கொள்க:**

நேர்முகப்பரீட்சைகளில் பங்குபற்றுவதானது, நியமனங்களை வழங்குவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படமாட்டாது.

08. **பரீட்சை நிபந்தனைகள் :**

8.1 விண்ணப்பதாரர்கள் விரும்பிய ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரர்கள் இப்பரீட்சையின் அனைத்து வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழிமூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் மூன்று (03) வினாத்தாள்களுக்கும் தோற்றுவது கட்டாயமாகும்.

8.2 பரீட்சைக் கட்டணம் ரூ. 1,200.00 ஆகும். பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது இணையவழி (Online) முறைமையினால் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் வழிமுறைகளின் கீழ் மட்டுமே செலுத்தல்களை மேற்கொள்ள வேண்டும்:

8.2.1 ஏதேனுமொரு வங்கி கடன் அட்டையின் மூலம் (Any Bank Credit Card)

8.2.2 இணையவழி செலுத்தல் வசதியுடைய ஏதேனுமொரு வங்கிப் பற்றட்டையின் மூலம் (Any Bank Debit Card with the Facility of Internet Transactions)

8.2.3 இலங்கை வங்கி இணையவழி வங்கி முறை / Flex செயலி மூலம் (Online Banking Method of Bank of Ceylon / Flex App)

8.2.4 ஏதேனுமொரு இலங்கை வங்கிக் கிளை மூலம் (Any Branch of the Bank of Ceylon)

குறிப்பு:

I. மேலே குறிப்பிட்டுள்ள முறைகளின் மூலம் செலுத்தல்களை மேற்கொள்வது பற்றிய அறிவுறுத்தல்கள் பரீட்சைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் இப்பரீட்சை தொடர்பான தொழில்நுட்ப அறிவுறுத்தல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

II. செலுத்தல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டமை குறுஞ்செய்தி (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் செய்தி மூலம் அறியத்தரப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையும் செலுத்தப்பட வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணத்தைக் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தியுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள செலுத்தல் முறைகளின் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்காது.

III. பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்படமாட்டாது அல்லது வேறு பரீட்சை ஒன்றிற்கு மாற்றப்படமாட்டாது.

8.3 இணையவழி (Online) பரீட்சை விண்ணப்பப்படிவம் ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும். விண்ணப்பதாரரினால் இணையவழியில் சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதி செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது/ ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது முறைமைக்குள் பிரவேசிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட கைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கோ அறியத்தரப்படும். இணையவழி விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர், பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தை (Instructions) பதிவிறக்கம் செய்துகொள்ளவும். விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்யும்போது அவ்வறிவுறுத்தல்களை சரியாகப் பின்பற்றவும். விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையற்ற விண்ணப்பங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

8.4 பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்கணிப்பின் அடிப்படையில், அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லைக்குள் உள்ள, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ குறிக்கப்பட்ட பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி சரியாகப் பூர்த்தி செய்யப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களுக்கான விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதி அட்டைகள் இணையவழி மூலம்

மட்டுமே விநியோகிக்கப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிக் குறிப்பிட்டு இணையத்தள அறிவித்தல் மூலமாக / விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலமாக அறியத்தரப்படும். தனது அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மின்னஞ்சல் மூலம் அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சை அமைப்புக் கிளையிடம் வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியைச் சரியாகக் குறிப்பிட வேண்டும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் வினவப்படும் யாதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியைத் தயார்நிலையில் வைத்திருப்பது பயனுள்ளதாகும்.

8.5 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ ஆன அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உள்ளது.

8.6 பரீட்சையை நடாத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்டவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவர். அச்சட்டவிதிகளை மீறினால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர்கள் உட்படுதல் வேண்டும்.

8.7 விண்ணப்பதாரர்களின் அடையாளத்தை உறுதிப் படுத்தல் - பரீட்சை மண்டப பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளத்தை உறுதிப்படுத்துதல் வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஒன்று மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்:

8.7.1 தேசிய அடையாள அட்டை

8.7.2 செல்லுபடியாகும் சடவுச்சீட்டு

8.7.3 செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

அத்துடன் பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறு முகத்தை மூடாமலும், இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்களை அணிய வில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவாறு இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய வேண்டும். இதற்கு உடன்படாத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத் தினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்த கணத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

**கவனத்திற் கொள்க:**

அ. விண்ணப்பத்துடன் எந்தவொரு ஆவணத் தையும் அல்லது அதன் பிரதியையும் இணைக்கக் கூடாது.

ஆ. ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்படும் சந்தர்ப்பத்தில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

இ. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் ஒவ்வொரு விண்ணப்பதாரரும் அனுமதி அட்டையில் தனது கையொப்பத்தை உறுதிப்படுத்திக் கொள்வது கட்டாயமாவதுடன், அதனைத் தான் சேவையாற்றும் பிரிவு / அலுவலகத் தலைவரைக் கொண்டு செய்து கொள்ள வேண்டும்.

ஈ. நியமனத்திற்குத் தகுதிபெறும் யாதேனு மொரு விண்ணப்பதாரர் அந்நிய மனத்தை வழங்கும் சந்தர்ப்பத்தில் நடை முறையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்பாடுகளின் கீழ் நியமனம் பெறுவ தற்குத் தகுதியடையவில்லை எனக் கருதப்பட்டாலோ அல்லது திருப்தியற்ற வேலை நடத்தை காரணமாகவோ இந்நிய மனத்தை வழங்காதிருக்கும் உரிமை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு உள்ளது.

09. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், அவ்வப்போது அரசாங்க சேவை தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் 2013-03-07 ஆம் திகதியன்று அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறைவேற்றுச் சேவை வகுதிக்கான ஆட்சேர்ப்பு நடைமுறையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளும், அவ்வாட்சேர்ப்பு நடைமுறையில் இதனகத்துப் பின்னர் செய்யப்படவுள்ள திருத்தங்களும் இப்பதவிக்கு ஏற்புடையதாக அமையும்.

10. **தவறான தகவல்களை வழங்குதல் :**

தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் குறிப் பிடப்பட்டுள்ள யாதேனுமொரு தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்புச் செய்வதற்கு முன்னர் தெரியவந்தால் உங்கள் பரீட்சார்த்திநிலை இரத்து செய்யப்படும்.

அத்தகைய பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் தெரியவந்தால் அதற்குரிய நடவடிக்கைகளுக்கு உட்பட்டு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

❖ யாதேனும் வெற்றிடங்களின் எண்ணிக்கையை அல்லது அனைத்து வெற்றிடங்களையும் நிரப் புவது அல்லது நிரப்பாதிருப்பது அல்லது பகுதியளவில் நிரப்புவது அல்லது இவ் ஒழுங்குவிதிகளில் குறிப்பிடப்படாத யாதேனு மொரு விடயம் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

11. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலின் மொழி உரைகளுக் கிடையே யாதேனுமொரு முரண்பாடு அல்லது ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள மொழி மூல அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்கப்படும்.

12. இவ்வறிவித்தலில் குறிப்பிடப்படாத ஒரு விடயம் தொடர்பிலோ அல்லது இவ்வாட்சேர்ப்பு நடவடிக்கை யினுள் யாதேனுமொரு சிக்கல் நிலைமை ஏற்படு மாயின் அது தொடர்பிலோ அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானமாக அமையும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புரைக்கிணங்க,

எஸ். எம். பியதிஸ்ஸ,
செயலாளர்,
தொழில் அமைச்சு.

7ஆம் மாடி "மெஹவர பியஸ",
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05,
2026, செத்தெம்பர் 14.

09-236

---

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

### இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர் களுக்கான II ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2026 (இலங்கை அதிபர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஆளணி அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.)

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதியுடைய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக இலங்கை அதிபர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்கள் மற்றும் இலக்கம் அப/21/1824/308/139 மற்றும் 2021.11.23 ஆம் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாகவும், இலக்கம் அப/12/1101/530/035 மற்றும் 2012.08.08 ஆம் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத் திற்கு அமைவாகவும் இலங்கை அதிபர் சேவையின் 2 ஆம் வகுப்பின் II ஆம் தரத்திற்கு மிகை ஆளணி அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையானது 2027 ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறியத் தரப்படுகின்றது.

விண்ணப்பப்படிவம் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் “Our Services” (எமது சேவைகள்) என்பதன் கீழ் உள்ள “Online Applications – Recruitment/EB Exams” (நிகழ்நிலை விண்ணப்பங்கள் - ஆட்சேர்ப்பு/வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சைகள்) ஊடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன், விண்ணப்பப்படிவங்களை நிகழ்நிலை முறை ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் 2026, செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும். விண்ணப்பப்படிவத்தை நிகழ்நிலை ஊடாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியின் உரிய பகுதிகளைக் கையெழுத்தால் பூர்த்தி செய்து, விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி, விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தனது தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலையையும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

02. இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்களின் வசதி கருதி பரீட்சை நடைமுறை (அட்டவணை 01) மற்றும் பாடத்திட்டம் (அட்டவணை 02) கீழே தரப்பட்டுள்ளன.

(அ) **பரீட்சை நடைமுறை (அட்டவணை 01)**

| *பாட இலக்கம்* | *பாடம்* | *காலம்* | *புள்ளிகள்* | *சித்தியடைவதற்குத் தேவை யான குறைந்த பட்சப் புள்ளி* |
|---|---|---|---|---|
| 01 | பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற்பார்வை | 03 மணித்தியாலங்கள் | 100 | 40 |

| *பாட இலக் கம்* | *பாடம்* | *காலம்* | *புள்ளி கள்* | *சித்தியடை வதற்குத் தேவை யான குறைந்த பட்சப் புள்ளி* |
|---|---|---|---|---|
| 02 | பாடசாலை திட்டமிடல் | 03 மணித்தி யாலங்கள் | 100 | 40 |
| 03 | கல்வியின் புதிய போக்குகள் மற்றும் நடை முறைகள் | 03 மணித்தி யாலங் கள் | 100 | 40 |

(ஆ) பாடத்திட்டம் (அட்டவணை 02)

| *பாட இலக்கம்* | *பாடம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | பாடசாலை நிர்வாகம் மற்றும் மேற் பார்வை | பாடசாலையொன்றின் நல்லாட்சிக்கு அதிபர் ஒருவரின் பணிகள் பற்றிய விண்ணப்பதாரரின் அறிவையும் புரிதலையும் பரிசோதிப்பதற்கான வினாக்கள் உள்ளடக்கப்படும். பாடசாலை முகாமைத்துவ முறைகள், நேர அட்டவணை தயாரித்தல், பொறுப்புகளைப் பகிர்ந்தளித்தல், பாடசாலை அபிவிருத்திக்கான மக்கள் பங்கேற்பு, பாடசாலை மைய முகாமைத்துவம் பாடசாலை அடிப்படையிலான ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர் நலன்புரி, மாணவர் நேயப் பாடசாலைக் கோட்பாடு, மாணவர் மையக் கல்வி ஆகிய துறைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும். |
| 02 | பாடசாலை திட்டமிடல் | அபிவிருத்தியின் முன்னோடி என்ற வகையில் அதிபர் ஒருவரின் பணிப்பங்கு பற்றிய விண்ணப்ப தாரர்களின் அறிவையும் புரிதலை யும் பரிசோதிப்பதற்காக வினாக்கள் உள்ளடக்கப்படும். பாடசாலை முகா மைத்துவ சபைகள், பாடசாலையின் தொலைநோக்கும் பணிப்பொறுப்பும், பாடசாலைத் தகவல் தளத்தைத் தயாரித்தல், ஒருங்கிணைந்த திட்டங் கள், நீண்டகால மற்றும் குறுகிய காலத் திட்டங்கள், வருடாந்த செயற்பாட்டுத் திட்டங்கள், பாட சாலை வலையமைப்பு மற்றும் வளங்களைத் திட்டமிடுதல், பிரதேச அபிவிருத்திக்குப் பாடசாலையின் பங்களிப்பு ஆகிய துறைகள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும். |

| *பாட இலக்கம்* | *பாடம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 03 | கல்வியின் புதிய போக்கு கள் மற்றும் நடை முறைகள் | கற்றல் மற்றும் கற்பித்தல் பற்றிய புதிய கோட்பாடு, அனுபவக் கற்றல், தர்க்கரீதியான சிந்தனை, கல்வியில் சமத்துவம், விசேட தேவைகளுடையோருக்கான கல்வி, முறைசாராக் கல்வி, முதியோர் கல்வி, ஆயுட்காலக் கல்வி, தேர்ச்சி சார்ந்த கல்வி, வாழ்வதற்கான கல்வி, மாணவர் ஆலோசனையும் அபிவிருத்திசார் வழிகாட்டலும் ஆகிய விடய சாதனங்கள் பற்றிய அறிவு பரீட்சிக்கப்படும். |

03. **பரீட்சையின் மொழி மூலம்:-**

சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பிய ஏதேனுமொரு மொழியில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்.

04. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்ப தாரர்களினதும் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேறு ஆவணம் செயலாளர், கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு அவர்களுக்கு வழங்கப்படும். அதற்கமைய அப்பெறுபேறுகள் www.moe.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்குத் தனிப்பட்ட பெறுபேறு ஆவணங் களைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப் படமாட்டாது.

05. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப் படி வத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ் நிலை ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதி செல்லு படியாகும் விண்ணப்பமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / ஏற்றுக்கொள்ளப்பட வில்லையா என்பது முறைமையினுள் பிரவேசிப்ப தற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரி மூலமாகவோ அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப் பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டல் அறி வுறுத்தல் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது குறித்த வழிகாட்டல்களை சரியாகப் பின்பற்றவும். விண் ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது.

முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப் படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்.

**கவனிக்க** - விண்ணப்பதாரர் தனது தனிப்பட்ட விபரங்களை விண்ணப்பப் படிவத்தில் உள்ளீடு செய்து அதனைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாக செயற்படுதல் வேண்டும் என்பதுடன், பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி உள்ளிட்ட எந்தவொரு விபரத்தையும் திருத்தம் செய்வதற்காக செய்யப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்தீர்மானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் நிகழ்நிலை மூலமாக மட்டுமே வெளியிடப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடனே இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிய விபரம் இணையத்தள அறிவித்தல் மூலமாகவோ / விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலமாகவோ அறிவிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையினைய தொடர்பு கொண்டு வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு தயாரித்த கோரிக்கைக் கடிதத்தை இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதி மற்றும் பொருந்தக்கூடியதாயின் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுசிச் சீட்டின் நகல்பிரதி ஆகியவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதி அட்டையை பரிசீலித்துப் பார்த்து திருத்தங்கள் ஏதேனுமிருப்பின், காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களை மேற்கொள்வதற்காகச் செய்யப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

07. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் குறிக்கப்பட்ட பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன், பரீட்சையின் முதலாவது நாளில் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

08. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள்ளே தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமான மண்டபப் பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் சுய அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்கு பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாகும்:

i. தேசிய ஆளடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப் படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மூடாமலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங் களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதற்கு உடன்படாத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த தருணத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

09. **பரீட்சைக் கட்டணங்கள்:**

(அ) முழுப் பரீட்சைக்காகவோ அல்லது அதன் பகுதி ஒன்றிற்காகவோ முதற்தடவையில் கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) அதன் பின்னர் ஒவ்வொரு தடவைக்கான பரீட்சைக்கும் அறவிடப்படும் கட்டணங்கள் பின்வருமாறு அமையும்.

ஒரு பாடத்திற்கு : ரூ. 250.00

(இ) பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையினால் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மட்டுமே செலுத்துதல் வேண்டும்.

i. ஏதேனுமொரு வங்கியின் கடன் அட்டை மூலம்

ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியைக் கொண்ட ஏதேனுமொரு வங்கியின் பற்று அட்டை மூலம்

iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை / Flex செயலி மூலம்

iv. ஏதேனுமொரு இலங்கை வங்கிக் கிளை மூலம்

(ஈ) மேற்கூறப்பட்ட முறைகள் மூலம் கொடுப்பனவு களைச் செய்யும் முறை பற்றிய வழிகாட்டல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(உ) கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற்றமை பற்றிய விபரம் குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். மேற் குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் சம்பந்தமாக இலங்கை பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(ஊ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

10. பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச் சட்ட விதிமுறைகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக நேரிடும். பரீட்சைப் பெறுபேறுகள் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

11. சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படுமாயின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

12. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனுமொரு விடயம் இருப்பின், அது தொடர்பாகத் தீர்மானிக்கும் உரிமை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்குரியது.

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும்
தொழிற்கல்வி அமைச்சு.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்தை,
2026, செத்தெம்பர் 21.

09-338/1

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

## இலங்கை அதிபர் சேவையின் உத்தியோகத்தர் களுக்கான I ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சை - 2026 (இலங்கை அதிபர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்கள் மற்றும் மிகை ஆளணி அடிப்படையில் இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 இற்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.)

இலக்கம் 1885/31 மற்றும் 2014.10.22 ஆம் திகதியுடைய இலங்கை அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாக இலங்கை அதிபர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்கள் மற்றும் இலக்கம் அப/21/1824/308/139 மற்றும் 2021.11.23 ஆம் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாகவும், இலக்கம் அப/12/1101/530/035 மற்றும் 2012.08.08 ஆம் திகதியுடைய அமைச்சரவைத் தீர்மானத் திற்கு அமைவாகவும் இலங்கை அதிபர் சேவையின் தரம் 3 இற்கு மிகை ஆளணி அடிப்படையில் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைத் தாண்டல் பரீட்சையானது 2027 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதத்தில் கொழும்பில் நடைபெறும் என இத்தால் அறியத் தரப்படுகின்றது.

விண்ணப்பப்படிவம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத் தின் www.doenets.lk எனும் இணையத்தளத்தில் “Our Services” (எமது சேவைகள்) என்பதன் கீழ் உள்ள “Online Applications – Recruitment/EB Exams” (நிகழ்நிலை விண்ணப்பங்கள் - ஆட்சேர்ப்பு/வினைத்திறன்காண் தடைத் தாண்டல் பரீட்சைகள்) ஊடாகப் பிரசுரிக்கப்பட்டுள்ள துடன், விண்ணப்பப் படிவங்களை நிகழ்நிலை முறை ஊடாக மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். நிகழ்நிலை மூலமாக விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் பணிகள் 2026, செத்தெம்பர் மாதம் 28 ஆம் திகதி மு.ப. 09.00 மணிக்கு ஆரம்பமாவதுடன், 2026, ஒற்றோபர் மாதம் 26 ஆம் திகதி பி.ப. 09.00 மணியுடன் நிறைவடையும். விண்ணப்பப் படிவத்தை நிகழ்நிலை ஊடாக சமர்ப்பித்த பின்னர், அதனைப் பதிவிறக்கம் செய்து அச்சிடப்பட்ட பிரதியின் உரிய பகுதிகளைக் கையெழுத்தால் பூர்த்தி செய்து, விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தி, விண்ணப்பத்தின் பிரதியொன்றைத் தனது தனிப்பட்ட கோவையில் சேர்ப்பதற்காக நிறுவனத் தலைவரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதை இறுதித் திகதி வரை தாமதப்படுத்துவதால் ஏற்படும் எந்தவொரு பாதகமான சூழ்நிலையையும் விண்ணப்பதாரரே பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

02. இப்பரீட்சைக்குரிய பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஏற்பாடுகள் 2454/54 மற்றும் 2025.09.18 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. விண்ணப்பதாரர்களின் வசதி கருதி பரீட்சை நடைமுறை

(அட்டவணை 01) மற்றும் பாடத்திட்டம் (அட்டவணை 02) கீழே தரப்பட்டுள்ளன.

(அ) **பரீட்சை நடைமுறை (அட்டவணை 01)**

| *பாட இலக்கம்* | *பாடம்* | *காலம்* | *புள்ளிகள்* | *சித்தியடைவதற்கு தேவையான குறைந்த பட்சப் புள்ளி* |
|---|---|---|---|---|
| 01 | தாபனக் கோவையின் ஏற்பாடுகளும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளும் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 02 | பாடசாலைகளில் நிதிகள் நிர்வாகம் மற்றும் நிதிப் பிரமாணங்கள் | 02 மணித்தியாலம் | 100 | 40 |
| 03 | இணைப்பு மொழி (ஆங்கிலம்) | 03 மணித்தியாலம் | 100 | 40 |

(ஆ) பாடத்திட்டம் ( அட்டவணை 02)

| *பாட இலக்கம்* | *பாடம்* | *பாடத்திட்டம்* |
|---|---|---|
| 01 | தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளும் | தாபனக் கோவையின் VII, VIII, IX, X, XI, XXIII, XXV, XXVI, XXVII, XXVIII, XXIX, XXX, XXXI, XXXII, XXXIII, XLVII, XLVIII ஆகிய அத்தியாயங்கள் மற்றும் இலக்கம் 2310/29 மற்றும் 2022.12.14 ஆந் திகதியுடைய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள் தொடர்பான அறிவு பரிசோதிக்கப்படும். |
| 02 | பாடசாலைகளின் நிதிகள் நிர்வாகம் மற்றும் நிதிப் பிரமாணங்கள் | வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள், நிதிக் கட்டுப்பாடும் நிதிசார் பொறுப்புக்களை கையளித்தல், பணத்தைப் பொறுப்பேற்றல், கணக்கிடல் மற்றும் கையேற்றல், கொடுப்பனவுகள், அரசாங்க நிதிப் பொறுப்பு, முற்பணங்களும் வங்கிக் கணக்குகளும், வேலைகளும் சேவைகளும், பொருட் சுற்றாய்வு, கணக்காய்வு வினவல்கள், அரசாங்க அலுவலகங்களில் பயன்படுத்தப்படும் அரசாங்க பேரேடுகள், வருமான மற்றும் செலவின சாராம்சங்கள், வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள், வழங்கப்படாத சம்பளங்கள், உத்தியோகபூர்வ தொலைபேசிகள் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் மற்றும் நிதிப் பிரமாணங் கள் பற்றிய பொதுவான அறிவு பரிசோதிக்கப்படும். |
| 03 | இணைப்பு மொழி (ஆங்கிலம்) | Suitable level of proficiency on the following forms of grammar in the written language is expected from the candidate.<br>- Tenses and Numbers<br>- Sentences<br>(Simple / Compound /Complex / Compound Complex)<br>- Relative Clauses<br>- Reported Speech<br>- Adjectives and Adverbs<br>- Determiners<br>- Prepositions<br>The knowledge on the modern formats and styles of writing is tested in following area of study:-<br>- Summary writing skills<br>- Report writing<br>- Essay writing |

03. **பரீட்சை மொழிமூலம் :**

(i) பாட இலக்கம் 01 மற்றும் 02 ஆகிய பாடங்கள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலங்களில் நடாத்தப்படும். விண்ணப்பதாரர்கள் தாம் விரும்பிய ஏதேனுமொரு மொழிமூலத்தில் மட்டுமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். விண்ணப்பதாரர் ஒருவர் தனது விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப் பட்டுள்ள பரீட்சை மொழிமூலத்தை மாற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

(ii) பாட இலக்கம் 03 இற்குரிய இணைப்பு மொழிப் பரீட்சை ஆங்கில மொழியில் மட்டுமே நடாத்தப்படும்.

04. பரீட்சைக்குத் தோற்றிய அனைத்து விண்ணப்ப தாரர்களினதும் பெறுபேறுகள் அடங்கிய பெறுபேறு ஆவணம் செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு அவர்களுக்கு வழங்கப்படும். அதற்கமைய அப்பெறுபேறுகள் www.moe.gov.lk எனும் அமைச்சின் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். பரீட்சார்த்திகளுக்கு தனிப்பட்ட பெறுபேறு ஆவணங் களைப் பரீட்சை ஆணையாளர் நாயகத்தால் வெளியிடப் படமாட்டாது.

05. நிகழ்நிலை (Online) பரீட்சை விண்ணப்பப்படி வத்தை ஆங்கில மொழியில் மாத்திரமே பூர்த்தி செய்தல் வேண்டும். விண்ணப்பதாரரினால் நிகழ் நிலை ஊடாக சமர்ப்பிக்கப்பட்ட மென் பிரதி செல்லு படியாகும் விண்ணப்பமாகத் திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதா / ஏற்றுக்கொள்ளப்பட வில்லையா என்பது முறைமையினுள் பிரவேசிப்ப தற்குப் பயன்படுத்தப்பட்ட கையடக்கத் தொலைபேசி இலக்கத்திற்கு குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரி மூலமாகவோ அறிவிக்கப்படும். நிகழ்நிலை விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன்னர் பரீட்சைக்கு விண்ணப்பிப் பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டல் அறி வுறுத்தல் படிவத்தை (Instructions) பதிவிறக்கம் செய்து கொள்ளவும். விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும்போது குறித்த வழிகாட்டல்களை சரியாகப் பின்பற்றவும். விண் ணப்பத்தின் அச்சிடப்பட்ட பிரதியைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதில் செய்யப்படும் எந்தவொரு திருத்தமும் செல்லுபடியாகும் திருத்தமாகக் கருதப்படமாட்டாது. முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்ப படிவங்கள் அறிவித்தல் எதுவுமின்றி நிராகரிக்கப்படும்

**கவனிக்க** - விண்ணப்பதாரர் தனது தனிப்பட்ட விபரங்களை விண்ணப்பப் படிவத்தில் உள்ளீடு செய்து அதனைப் பூர்த்தி செய்யும்போது மிகவும் கவனமாக செயற்படுதல் வேண்டும் என்பதுடன், பெறுபேறுகள் வெளியிடப்பட்ட பின்னர் பெயர், தேசிய ஆளடையாள அட்டை இலக்கம், முகவரி உள்ளிட்ட எந்தவொரு

விபரத்தையும் திருத்தம் செய்வதற்காக செய்யப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.

06. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர் என்ற முன்தீர்மானத்தின் அடிப்படையில், விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் சரியாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் நிகழ்நிலை மூலமாக மட்டுமே வெளியிடப்படும். பரீட்சை அனுமதி அட்டைகள் வெளியிடப்பட்டவுடனே இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அது பற்றிய விபரம் இணையத்தள அறிவித்தல் மூலமாகவோ / விண்ணப்பதாரர்களுக்குக் குறுஞ்செய்தி மூலமாகவோ அறிவிக்கப்படும். அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரர் எவரேனும் இருப்பின், இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நிறுவனப் பரீட்சைகள் ஒழுங்கமைப்புக் கிளையினை தொடர்பு கொண்டு வினவ வேண்டும். அவ்வாறு வினவும் போது, விண்ணப்பதாரர் தான் விண்ணப்பித்த பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரரின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி ஆகியவற்றைச் சரியாகக் குறிப்பிட்டு தயாரித்த கோரிக்கைக் கடிதத்தை இணையத்தள அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு வினவும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் நகல் பிரதி மற்றும் பொருந்தக்கூடியதாயின் பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச் சீட்டின் நகல்பிரதி ஆகியவற்றைத் தயார் நிலையில் வைத்திருப்பது பிரயோசனமாக இருக்கும். அனுமதி அட்டையை பரிசீலித்துப் பார்த்து திருத்தங்கள் ஏதேனுமிருப்பின், காலதாமதமின்றி பரீட்சைத் திணைக்களத்தைத் தொடர்புகொண்டு விண்ணப்பத்திற்கு அமைவாக உரிய திருத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்தில் வைத்து திருத்தங்களை மேற்கொள்வதற்காகச் செய்யப்படும் கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

07. பரீட்சைக்கான அனுமதி அட்டையில் விண்ணப்பதாரரின் கையொப்பம் நிறுவனத் தலைவரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் குறிக்கப்பட்ட பரீட்சை இலக்கத்தின் கீழ் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியதுடன், பரீட்சையின் முதலாவது நாளில் தனது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டையை மண்டபப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தல் வேண்டும். தனது அனுமதி அட்டையை சமர்ப்பிக்காத பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

08. பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள்ளே தாம் தோற்றுகின்ற ஒவ்வொரு பாடத்திற்குமான மண்டபப் பொறுப்பதிகாரி திருப்தியடையும் வகையில் சுய அடையாளத்தை உறுதிப்படுத்தல் வேண்டும். அதற்கு பின்வரும் ஆவணங்கள் மட்டுமே செல்லுபடியாகும் :

i. தேசிய அடையாள அட்டை;
ii. செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு;
iii. செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அத்துடன், பரீட்சார்த்திகள் அடையாளத்தை உறுதிப் படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் முகத்தை மூடாமலும், இலத்திரனியல் தொடர்பாடல் சாதனங்களை அணியவில்லை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் இரு காதுகளையும் மூடாமலும் பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசித்தல் வேண்டும். அதற்கு உடன்படாத விண்ணப்பதாரர்கள் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், பரீட்சை மண்டபத்திற்குள் பிரவேசித்த தருணத்திலிருந்து பரீட்சை முடிவடைந்து அங்கிருந்து வெளியேறும் வரை முகத்தையும் இரு காதுகளையும் மூடாமல் இருத்தல் வேண்டும்.

09. **பரீட்சைக் கட்டணங்கள்:**

(அ) முழுப் பரீட்சைக்காகவோ அல்லது அதன் பகுதி ஒன்றிற்காகவோ முதற்தடவையில் கட்டணம் எதுவும் அறவிடப்பட மாட்டாது.

(ஆ) அதன் பின்னர் ஒவ்வொரு தடவைக்கான பரீட்சைக்கும் அறவிடப்படும் கட்டணங்கள் பின்வருமாறு அமையும்.

ஒரு பாடத்திற்கு : ரூ. 250/-

(இ) பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது நிகழ்நிலை முறைமையினால் வழங்கப்படும் பின்வரும் கட்டணம் செலுத்தும் முறைகளின் கீழ் மட்டுமே செலுத்துதல் வேண்டும்.

i. ஏதேனுமொரு வங்கியின் கடன் அட்டை மூலம்
ii. இணைய வழிக் கொடுப்பனவு வசதியைக் கொண்ட ஏதேனுமொரு வங்கியின் பற்று அட்டை மூலம்
iii. இலங்கை வங்கியின் நிகழ்நிலை வங்கி முறைமை / Flex செயலி மூலம்
iv. ஏதேனுமொரு இலங்கை வங்கிச் கிளை மூலம்

(ஈ) மேற்கூறப்பட்ட முறைகள் மூலம் கொடுப்பனவு களைச் செய்யும் முறை பற்றிய வழிகாட்டல்கள் இணையத்தளத்தில் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப வழிகாட்டல்களின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

(உ) கொடுப்பனவுகள் கிடைக்கப்பெற்றமை பற்றிய விபரம் குறுஞ்செய்தி (SMS) மூலமாகவோ அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ அறிவிக்கப்படும். பரீட்சைக் கட்டணத்திற்கான முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், பரீட்சைக் கட்டணம் குறைவாக அல்லது அதிகமாகச் செலுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். மேற் குறிப்பிட்ட கொடுப்பனவு முறைகள் மூலம் பரீட்சைக் கட்டணங்களைச் செலுத்தும் போது ஏற்படும் தவறுகள் சம்பந்தமாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

(ஊ) பரீட்சைக்காகச் செலுத்தப்பட்ட பணம் எந்தவொரு காரணத்தைக் கொண்டும் மீளளிக்கப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்கு மாற்றப்படவோ மாட்டாது.

10. பரீட்சையை நடாத்துவது சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட விதிமுறைகளுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச் சட்ட விதிமுறைகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உள்ளாக நேரிடும். பரீட்சைப் பெறுபேறுகள் சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியான தீர்மானமாகும்.

11. சிங்களம், ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழிகளில் பிரசுரிக்கப்படும் இந்த அறிவித்தலின் மொழி வசனங்களிடையே ஏதேனும் பொருத்தமின்மை அல்லது முரண்பாடுகள் காணப்படுமாயின், அத்தகைய சந்தர்ப்பத்தில் சிங்கள மொழி அறிவித்தலுக்கு அமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

12. இவ் அறிவித்தலில் உள்ளடங்காத ஏதேனுமொரு விடயம் இருப்பின், அது தொடர்பாகத் தீர்மானிக்கும் உரிமை கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் செயலாளருக்குரியது.

**நாலக களுவெவ,**
செயலாளர்.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு,
இசுருபாய,
பெலவத்தை,
2026, செத்தெம்பர் 21.

09-338/2

---

## இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை - 2026

இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையைச் சேர்ந்த கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட உத்தியோகத்தர்களிடமிருந்து, தற்போது வெற்றிடமாக உள்ள 12 கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் மற்றும் 03 ஆராய்ச்சி உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. **ஆட்சேர்ப்புக்கான தகைமைகள் :**

1. **கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் :**

i. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் கால்நடை அறுவை சிகிச்சை நிபுணராகக் குறைந்தபட்சம் ஒரு (01) வருடமும் அதிகபட்சம் மூன்று (03) வருடங்களும் நிரந்தர சேவையை நிறைவு செய்திருத்தல் மற்றும், முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு (மேல் பிரிவு) தேர்ச்சியுடன் கூடிய கால்நடை மருத்துவத்தில் நான்கு வருடப் பட்டப் படிப்பைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ii. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் விதிமுறைகளின்படி, எந்தவொரு ஒழுக்காற்றுத் தண்டனையும் பெறாமல் இருத்தல்.

iii. முந்தைய ஆண்டுகளில் சம்பள உயர்வுகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(குறிப்பு : இந்த முறை மட்டும், 2016 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையைச் சேர்ந்த கால்நடை மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு,

கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும்.)

2. **ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் :**

i. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சவையில் கால்நடை மருந்துவ உத்தி யோகத்தராக அல்லது கால்நடை பராமரிப்பு உத்தியோகத்தராக குறைந்தது. 1 வருடமும், அதிகபட்சம் 3 வருடமும் திருப்திகரமான மற்றும் நிரந்தர சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேலும், சம்பந்தப்பட்ட கால்நடை மருத்துவம் / கால்நடை பராமரிப்பு அறிவியல்/ விவசாய அறிவியல் ஆகிய துறைகளில் 4 வருட பட்டப்படிப்பை, முதல் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு - மேல் தரத்துடன் பெற்றிருத்தல் வேண்டும்.

ii. அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020 இன் விதிமுறைகளின்படி ஒழுக்காற்றுத் தண்டனை எதுவும் பெற்றிருக்கக் கூடாது.

iii. முந்தைய ஆண்டுகளில் சம்பள உயர்வுகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(குறிப்பு: இம்முறை மட்டும், 2016 ஆம் ஆண்டில் நியமனம் பெற்ற இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையைச் சேர்ந்த கால்நடை வைத்திய உத்தியோகத்தர்கள் மற்றும் கால்நடை பராமரிப்பு உத்தியோகத்தர்கள், ஆராய்ச்சி உத்தியோகத்தர்கள் பதவிக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கப்படுவர்.)

02. நீங்கள் இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்பினால், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து, 2026.10.26 திகதிக்கு முன்னர், கீழ்கண்ட முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்ப வேண்டும்: பணிப்பாளர் நாயகம், கால்நடை திணைக்களம், த. பெ. இல. 13, பேராதனை. மாதிரி விண்ணப்பப் படிவத்தில் தலைப்பு இலக்கம் 01 முதல் 06 வரையிலான தகவல்களை முதல் பக்கத்திலும், ஏனைய தலைப்புகளுக்குரிய தகவல்களை அடுத்த பக்கத்திலும் உள்ளடக்கும் வகையில், A4 அளவிலான ஒரு தாளின் இருபுறங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்பட வேண்டும். அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும், முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப் படிவத்தை அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில், "இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் கால்நடை ஆராய்ச்சி அதிகாரி மற்றும் ஆராய்ச்சி அதிகாரி பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2026" என குறிப்பிட வேண்டும்.

03. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் எழுத்துப் போட்டிப் பரீட்சை நடத்தப்படும். பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்ப தாரரின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை (NIC) அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் ரூ. 1,000.00 பரீட்சைக் கட்டணத்தை, கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள சராப் (Cashier) அவர்களிடம் செலுத்தலாம் அல்லது கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கு இலக்கில் வரவு வைக்கப்படும் வகையில் நாட்டிலுள்ள எந்தவொரு மக்கள் வங்கி (People's Bank) கிளையிலும் பணம் செலுத்தி பெறப்படும் பற்றுச்சீட்டை (Receipt) அல்லது அதன் தெளிவான பிரதியை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் நன்கு ஒட்ட வேண்டும். பரீட்சைக் கட்டணத்திற்காக காசுக் கட்டளை அல்லது நேரடியாக பணம் அனுப்புவது ஏற்றுக்கொள்ளப்படாது. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட கட்டணம் எந்தவொரு காரணத்திற்காகவும் மீளச் செலுத்தப்படாது. மேலும், செலுத்தப்பட்ட கட்டணத்தை வேறு எந்தப் பரீட்சைக்கும் மாற்றிக் கொள்ளவும் முடியாது.

கணக்கு வைத்திருப்பவரின் பெயர் :

பணிப்பாளர் நாயகம், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம்

வங்கி : மக்கள் வங்கி, பேராதனை கிளை

கணக்கு இல. : 057-100179027275

04. பரீட்சைக்கான அனுமதிச் சீட்டுகள் வழங்கப்பட்ட பின்னர், விண்ணப்பதாரர் ஒருவருக்கு அனுமதிச் சீட்டு கிடைக்காத சந்தர்ப்பத்தில், விண்ணப்பப் படிவத்தின் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பி விசாரிக்க வேண்டும். ஒவ்வொரு பரீட்சை விண்ணப்பதாரரும், தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திற்கான அனுமதிச் சீட்டில் தனது கையொப்பத்தைச் சான்றளித்துக் கொண்டு, முதன்முறையாக அந்த மண்டபத்தில் பரீட்சைக்குத் தோன்றும் நாளில், அந்த மண்டபத்தின் மண்டபத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும். பரீட்சையை நடத்துதல் மற்றும் பெறுபேறு களை வெளியிடுதல் தொடர்பாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகளுக்கு அனைத்து பரீட்சை விண்ணப்பதாரர்களும் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

05. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி ஊடகங்களில் மட்டும், கண்டி நகரில் நடத்தப்படும்.

06. எழுத்துப் போட்டிப் பரீட்சையில் பெறப்படும் திறமையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும். பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில், தற்போது காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அதிகூடிய புள்ளிகளைப் பெறும் அதிகாரிகள், திறமையின் வரிசைப்படி அரச சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுவர். (பாடத்திட்டம் இணைப்பு 02-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.)

07. மேலும், மேற்கூறிய எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் அல்லது ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிக்கு நியமனம் பெற்ற பின்னர், மீண்டும் கால்நடை வைத்திய அதிகாரி/கால்நடைப் பராமரிப்பு அதிகாரி பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்கான வாய்ப்பு இல்லை.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிமுறைகளின்படி,

செயலாளர்,
விவசாயம், கால்நடை வளங்கள், காணி மற்றும்
நீர்ப்பாசன அமைச்சு.

திகதி

**இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையில் கால்நடை ஆராய்ச்சிஉத்தியோகத்தர் மற்றும் ஆராய்ச்சி உத்தியோகத்தர் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சை - 2026**

APPLICATION FOR RECRUITMENT OF OFFICERS IN THE POST OF VETRINARY RESEARCH OFFICERS AND RESEARCH OFFICERS IN THE SRI LANKA ANIMAL PRODUCTION AND HEALTH SERVICE-2026

[ ]
(அலுவலக பாணைக்காக)

எழுத்துப் போட்டிப் பரீட்சையை எழுதும் மொழி மூலம்

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ] (சம்பந்தப்பட்ட எண்ணை பெட்டியில் எழுதவும்.)

பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் முறை [ ]

- (கால்நடை ஆராய்ச்சி உத்தியோகத்தர் - 01)
- (ஆராய்ச்சி உத்தியோகத்தர் 02)
- (இரண்டு பதவிகளுக்கும்-03)

தொடர்புடைய எண்ணை பெட்டிக்குள் எழுதவும்.)

01. (i) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில பேரெழுத்தில்):

..........................................................................................................................................

HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)

(ii) முதலெழுத்துக்களில் குறிக்கப்படும் பெயர்(ஆங்கில பேரெழுத்தில்)

..........................................................................................................................................

(உதா : GUNAWARDHANA, H.M.S.K.)

(iii) முழுப்பெயர் (சிங்களம்/ தமிழ்)

..........................................................................................................................................

02. தற்போதைய பணியிடம் மற்றும் முகவரி (ஆங்கில பேரெழுத்தில்):

..........................................................................................................................................................................

03. தேசிய ஆளடையாள அட்டை இல. : | | | | | | | | | | | | |

04. பால் (ஆண்/பெண்) ஆண் - 0

பெண் - 1 ☐ (உரிய இலக்கத்தை எழுதவும்)

05. பிறந்தி திகதி : வருடம் : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

06. தற்போது வகிக்கும் பதவி:

..........................................................................................................................................................................

07. இ.கா. உ. மற்றும் சு. சே. நியமன திகதி:

..........................................................................................................................................................................

08. I. நியமனம் நிரந்தரமாக்கப்பட்டிருந்தால், நிரந்தரமாக்கப்பட்ட திகதி:

..........................................................................................................................................................................

II. சேவை காலம்: ..........................................................................................................................................................

09. சேவை விபரம்:

| *தற்போது வகிக்கும் பதவி* | *காலவரையறை* | | *சேவை நிலையம்* | *திணைக்களம்/மாகாண சபை* |
|---|---|---|---|---|
| | *தொடக்கம்* | *வரை* | | |
| | | | | |

10. பெற்றுள்ள பட்டங்கள் தொடர்பான விபரங்கள்:

| *பெறப்பட்ட பட்டம்/ முதுகலை பட்டம்* | *வகுப்பு* | *பல்கலைக்கழகம்* | *வருடம்* |
|---|---|---|---|
| 1.<br>2.<br>3. | | | |

11. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு முந்தைய ஆண்டுகளில் சம்பள உயர்வுகளைப் பெற்றுள்ளமை :

| *தொ. இல.* | *வருடம்* | *சம்பள உயர்வு பெறப்பட்டதா ஆம் / இல்லை* |
|---|---|---|
| | | |

12. I. ஒழுக்காற்றுத் தண்டனைகள் விதிக்கப்பட்டுள்ளனவா என்பது?

..........................................................................................................................................................................

II. எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை குறித்த விபரங்கள்

..........................................................................................................................................................................

..........................................................................................................................................................................

13. பரீட்சைக் கட்டணம் செலுத்திய ரசீது பற்றிய விபரங்கள் :

I. பரீட்சைக் கட்டணம் செலுத்திய வங்கிக் கிளை :...................................................................................

II. ரசீது இலக்கம் :........................................................................................................................................

III. திகதி :...................................................................................

| ரசீதை கழன்று விடாத வகையில், அதன் ஒரு ஓரத்தை மட்டும் இங்கே ஒட்டவும். |
|---|

இவ் விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் நான் அறிந்த அளவில் உண்மையானவை எனவும் சரியானவை எனவும் இத்தால் உறுதிபடுத்துகிறேன். என்னால் வெளியிடப்பட்ட தகவல்கள் பொய்யானது அல்லது தவறானது என நான் தெரிவு செய்வதற்கு முன்னர் வெளிப்படுமாயின் நான் தகுதியற்றவர் ஆவேன் என்பதையும், இப் பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னர் தெரியவரும் பட்சத்தில் எதுவித நட்டஈடுமின்றி சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிந்துள்ளேன். நான் எந்தவொரு நீதிமன்றத்திலும் தண்டனைக்குரிய குற்றத்திற்கு ஆளாகவில்லை யெனவும் இத்தால் எனது வழமையான ஒப்பத்தையிட்டு உறுதிபடுத்துகிறேன். மேலும், பரீட்சை நடாத்துவது தொடர்பாக கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு நான் கட்டுப்பட்டு நடப்பேன் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

திகதி :.......................................                ................................................................

விண்ணப்பதாரரின் கையொப்பம்

**திணைக்களம் நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

மேற்கூறப்பட்ட விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி .................................................................................................. இத் திணைக்களத்தில்/ .............................................. மாகாண சபையில் .................................................. பதவியை வகிக்கும் உத்தியோகத்தர் எனவும் இவ்விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அவரின் தனிநபர் கோவையின் பிரகாரம் சரியானது என உறுதிப்படுத்துகிறேன். இவ் அலுவலர் மேற் குறிப்பிடப்பட்ட பதவியின் பொருட்டு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை இத் திணைக்களத்திலிருந்து/மாகாண அரசாங்க சேவையிலிருந்து விடுவிப்புச் செய்ய முடியும்/முடியாது எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

திகதி :.......................................                ................................................................

திணைக்களம் தலைவரின் (பதவி முத்திரை)

**இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவையின் கால்நடை ஆராய்ச்சி அதிகாரி மற்றும் ஆராய்ச்சி அதிகாரி பதவிகளுக்கு நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை - 2026**

01. தேர்வு தொடர்பான விபரங்கள் :

| *வினாத்தாள் இல.* | *வினாத்தாள்* | *காலம்/நேரம்* | *மொத்த புள்ளிகள்* | *சித்தியடைய வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|---|
| 01 | ஆராய்ச்சித் துறையுடன் தொடர்புடைய அறிவை மதிப்பிடுவதற்கான வினாத்தாள் | 2 மணி நேரம் | 100 | 50<br>* |
| 02 | தகுதித் திறன் தேர்வு | 1 மணி நேரம் | 100 | 50<br>* |

* தொடர்புடைய வெற்றிடங்களின் எண்ணிக்கையை விட, தேர்ச்சி பெறுவதற்குத் தேவையான குறைந்தபட்ச புள்ளிகளைப் பெற்ற அதிகாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருக்கும் சந்தர்ப்பத்தில், தேர்ச்சி பெறுவதற்கான குறைந்தபட்ச புள்ளி அளவைக் குறைக்க நியமன அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

02. **தேர்வுக்கான பாடத்திட்டம்:**

| *வினாத்தாளின் பெயர்* | *பாடத்திட்டம்* |
|---|---|
| ஆராய்ச்சித் துறையுடன் தொடர்புடைய அறிவை மதிப்பிடுவதற்கான வினாத்தாள் | 1. இலங்கையின் விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி சூழல், இலங்கையின் தேசிய ஆராய்ச்சிக் கொள்கை, விவசாய ஆராய்ச்சிக் கொள்கை, ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுக்கீடு, ஆராய்ச்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய நிறுவனங்கள், ஆராய்ச்சி முன்னுரிமைகள்.<br><br>2. ஆராய்ச்சி பெயரிடல், ஆராய்ச்சி வகைகள், அடிப்படை தயாரிப்புகளை மேற்கொள்ளக்கூடிய மற்றும் தொடர்புடைய ஆராய்ச்சி.<br><br>3. ஆராய்ச்சித் தேவைகள் - அவற்றை அடையாளங் காணுதல் மற்றும் பகுப்பாய்வு செய்ய வேண்டிய அவசியம், அடையாளங் காணும் முறைகள் மற்றும் பகுப்பாய்வு முறைகளுக்கு முன்னுரிமை அளித்தல்.<br><br>4. ஆராய்ச்சி வடிவமைப்பு, மாதிரி எடுக்கும் நுட்பங்கள், மாதிரி அளவு, பரிசோதனை முறைகள், இடத்தைத் தேர்ந்தெடுக்கும்போது கருத்தில் கொள்ள வேண்டிய காரணிகள், பரிசோதனைகள், கை முறை, தர்க்கரீதியான வடிவமைப்பைப் பயன்படுத்துதல், ‘அனைத்தும் அல்லது இல்லை’ என்ற கோட்பாடு.<br><br>5. ஆராய்ச்சிகள் தொடர்பான தகவல்களைத் தேடுதல், சர்வதேச மற்றும் தேசிய ஆராய்ச்சி வெளியீடுகள், சஞ்சிகைகள், தகவல் தேடுதல், நூலக வலையமைப்புகள்.<br><br>6. ஆராய்ச்சி தொடர்பான புள்ளியியல், புள்ளியியல் மற்றும் தரவு பகுப்பாய்வு தொகுப்புகள் மற்றும் மென்பொருட்கள், அடிப்படை கணக்கீடுகள், மொத்தம், சராசரி, திட்ட விலகல் (Standard Deviation), தொடர்புக் குணகம் (Correlation Coefficient), இயல்பான பரவல் வளைவைப் (Normal Distribution Curve) பயன்படுத்துதல்.<br><br>7. ஆவணப்படுத்துதல், ஆராய்ச்சி முடிவுகள் தொடர்பான அறிக்கைகள், ஆராய்ச்சி வெளியீடுகளுக்கான நிலையான வடிவம், எழுதும்போது பின்பற்ற வேண்டிய விதிமுறைகள், சுருக்கக் குறிப்புகளின் பயன்கள் மற்றும் அவற்றின் ஒப்பீட்டளவிலான நன்மைகள் மற்றும் தீமைகளுடன் கூடிய பல்வேறு விளக்கக்காட்சிகள்.<br><br>8. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு - ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் (Extension) ஆகியவற்றுக்கு இடையிலான இடைவெளி, ஆராய்ச்சி, விரிவாக்கத் தொடர்புகள், ஆராய்ச்சி முடிவுகளைப் பகிர்ந்தளித்தல், ஆராய்ச்சிக்குப் பிந்தைய தொடர்புகள்.<br><br>9. ஆராய்ச்சிகளின் ஒழுக்கநெறிகள், பிற மூலங்களிலிருந்து தகவல்களைப் பெறுதல், வெளியிடப்படாத தரவுகளைப் பயன்படுத்துதல், ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல், கேள்விகள் அனைத்திற்கும் பதிலளிக்க வேண்டும். |
| தகுதித் திறன் தேர்வு | * வேட்பாளரின் தர்க்கரீதியான சிந்தனைத் திறன், பகுப்பாய்வு திறன் மற்றும் முடிவெடுக்கும் திறன் ஆகியவற்றை மதிப்பிடுவதற்காக, பல்தேர்வு மற்றும் குறுகிய பதில் வகையைச் சேர்ந்த 50 கேள்விகள் கொண்டதாக இப்பரீட்சை அமையும். அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்க வேண்டும். |

09-310

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.